

பி.ஸ்ரீ

421. சோகமும் சோபனமும்

வால்மீகி கதையிலே ராமன் காடு செல்வதை முன்னிட்டு யாத்ராதானம் செய்யும்போது இரத்தினம் ஆபரணம் வாகனம் முதலிய பொருள்களை வழங்கிய பின், திரிசடன் என்னும் முனிவன் வந்து யாசிக்கிறான்.

இம் முனிவன் தன் மனைவியால் தூண்டப்பட்டுப் பேராசையுடன் வருகிறான். ராமன் தன் வசமாக எஞ்சியுள்ள பசுக் கூட்டத்தில் வேண்டிய பசுக்களைக் கொள்ளும்படி திரிசடனை நோக்கிப் புன்னகையோடு சொல்லுகிறான். உடனே பிராம்மணன் என்ன செய்கிறான் தெரியுமா?

மேலாடையை அரையில் இறுகக் கட்டிக்கொண்டு ஒரு தடியை வீசி எறிகிறான், கையின் முழு விசையினால். தடி விழுந்த இடம் வரையுள்ள பசுக்களையெல்லாம் தனக்குக் கொடுக்கும்படி வேண்டுகிறான்.



ராமன் அப்படியே கொடுத்து விடுகிறான் என்பது ஆதிகவி அயோத்தியா காண்டத்திலே சொல்லும் கதை.

அருத்தி வேதியரும் விருத்தி வேதியரும்

அந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டு 'அருத்தி வேதியர்'களையெல்லாம் நோக்கிச் சிரிக்கிறது கம்ப சித்திரம். இது அயோத்தியா காண்டத்தில் பிரஸ்தாபிக்கப்படாமல், சுந்தர காண்டத்திலே எவ்வளவு கலைச் சுவையுடன் தக்க சந்தர்ப்பம் தேடிக் கொண்டு வருகிறது, பாருங்கள்!

'அருத்தி வேதியர்'களை நோக்கி நகையாடும் கவிஞன், அறிவையும் கலைகளையும் விருத்தி செய்யும் வேதியர்களைப் பெரிதும் போற்றுகிறான்.

அயோத்தியா காண்டத்திலே பாரத்வாஜ முனிவர் பரதனை எதிர்கொள்

ளும் சந்தர்ப்பத்தில் வரும் கவியைப் பாருங்கள் :

பரத்தின் ஓங்கும்
பரத்துவன் என்னும்அவ்
வரத்தன் மேதகு
மாதவன் வைகிடம்
அருத்தி கூர
அணுகினன்; ஆண்(டு)அவன்
விருத்தி வேதிய—
ரோடெதிர் மேவினன்.

[பரத்தின் ஓங்கும் - பரஞான வாழ்க்கையில் ஓங்கி வளர்ந்து கொண்டேயிருக்கும். பரத்துவன் - பரத்வாஜ முனிவர். அவ் வரத்தன் - பிரசித்தமான வரப் பிரசாதங்களை யுடையவன். மேதகு மாதவன் - ஞானத்திலும் தேஜஸிலும் மாட்சி பெற்றுள்ள மகா தபஸ்வி. வைகு இடம் - தங்குகிற தபோவனம். அருத்தி கூர - (பரதனுடைய வறண்ட உள்ளத்திலே ஊற்றுப் போல்) ஆசை தோன்றி அதிகரிக்க. அணுகினன் - நெருங்கி வந்தான். ஆண்டு அவன் - அங்கே அந்தப் பரத்வாஜ முனிவர். விருத்தி வேதியர் - வேதத்தை அடிப்படையாகக் கொண்ட ஞானத்தையும் கலைகளையும் அபிவிருத்தி செய்யும் வேதியர்கள்.]

பயங்கர 'வேதியன்'

'அருத்தி வேதிய'ரை நினைத்து அழுத சீதை, வேறொரு வேதியனை நினைத்துக் கொண்டதும் உயிர் ஒடுங்கிப் போகிறாளாம்.

யாசக வேதியரின் பேராசை கண்டு ராமன் சிரித்தது சீதையின் அழுகைக்குக் காரணமாயிற்று. ராஜகுல பயங்கரனை பரசுராமனின் தவ வலிமையை வில்லோடு ராமன் கவர்ந்து கொண்டானல்லவா? அதை நினைத்ததும் 'அவ்வளவு பேராற்றல் வாய்ந்தவர் இந்த அரக்கனை ஒடுக்கி என்னை ஏன் மீட்டுக் கொள்ள ஓடி வரவில்லை?' என்ற நினைப்பும் உண்டாகிறது.

அந்தப் பரசுராமன் அபசகுனம் போல் எதிர்ப்பட்டுத் தொந்தரவு செய்ய வந்தான். கலியாணம் முடிந்து கணவனோடும் மாமனார் முதலானவர்களோடும் இவள் அயோத்திக்குப் போகும் வழியிலே வந்து சேர்ந்தான்.

க்ஷத்திரிய வம்சத்தையே கருவறுத்த எதிரி யல்லவா? இருபத்தொரு முறை அங்கங்கேயுள்ள அரசர்களை யெல்லாம் கோடாலியால் கொன்றொழித்தவனல்லவா?

கார்த்த வீரியார்ச்சுனன் என்ற அசுர சுபாவமுள்ள அரசன் பரசுராமனுடைய தந்தையைக் கொன்று விட்டான். ஒரு பெரும் பாதகச் செயல். ஆனால் பரசுராமன் வேதவித்தாக இருந்தும் வேதம் போற்றும் அருள் நெறியை அறவே கைவிட்டுப் பழிக்குப் பழி வாங்கத் துணிந்தான். அந்தக் கொடிய செயலில் தான் எவ்வளவு கொடுமை!

'பரிவறு சிந்தை அப்பரசுராமன்'— அதாவது, துளி இரக்கமு மில்லாத 'பாலைவன'ச் சிந்தையுள்ளவன்—என்கிறான் கவிஞன் பாலகாண்டத்திலே.

இத்தகைய பரசுராமனை ராமன் 'வேதியன்' என்றே ஒப்புக்கொள்ள வில்லையாம், 'வேத வித்தாய மேலோன் மைந்தன்' என்று தான் குறிப்பிடுகிறான்.

ராமனுடைய மன்னிப்பு முக்கியமாக வேத வித்தான தந்தையார் பொருட்டேயாகும். பரசுராமன் தவ வேடத்துடன் விரதம் பூண்டிருந்ததும் மன்னிப்பிற்கு ஒரு காரணம். 'இனியாவது நல்வழிப்படுவான், பிழைத்துப் போகட்டும்' என்று தான் ராமன் அபார கருணையுடன் பரசுராமனைக் கொல்லாது விட்டு விடுகிறான்.

அந்தக் கருணையல்ல இப்போது சீதையின் நினைவிற்கு வருவது. பரசுராமனின் கொடுமை தான் பயங்கரமாக வருகிறது. அந்தத் தவச் செருக்கு ஒடுங்கிப்போனதும் ஞாபகத்திற்கு வருகிறது:

மழுவின் வாளினின்
மன்னரை மூவெழு
பொழுதின் நூறிப்
புலவுறு புண்ணினீர்

முழுகி னான்தவ
  மொய்ம்பொடு மூரிவில்
தழுவு மேன்மை
  நினைந்(து),உயிர் சாம்புவாள்.

[மழுவின் வாளினின் - கோடாலிப் படையால் மூ எழு பொழுதின் - இருபத்தொரு முறை. நூறி - அழித்து. புலவு உறு புண்ணின் நீர் - (அந்த அரசர்களின்) புலால் நாற்றம் பொருந்திய இரத்த நீரில். முழுகினான் - நீராடித் தர்ப்பணம் செய்த பரசுராமனுடைய. தவ மொய்ம்பொடு - தவத்தின் வலிமையோடு. மூரி வில் - வலிமையுள்ள (அவனுடைய) வில்லை. தழுவும் - கொண்ட. உயிர் சாம்புவாள் - உயிர் ஒடுங்குவாள்.]

அரசர்களுடைய இரத்தத்தைக் குளமாகத் தேக்கி, அந்த இரத்தத்திலே ஆசாரமாக ஸ்நானம் செய்து வைதிக முறையில் தர்ப்பணமும் செய்து முடித்தானும் பரசுராமன், தவத்தால்தான் பெற்றிருந்த அபார வலிமை கொண்டு.



அந்த வலிமையை, அந்தத் தவச் செருக்கை, அப்படியே அவன் கொடுத்த வில்லுடன் கவர்ந்து கொண்டான் ராமன். அப்படிக் கவர்ந்து கர்வ பங்கம் செய்த பின் பரசுராமனுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த அந்த மேன்மையை நினைத்து வருந்துகிறாள் சீதை இப்போது.

பால காண்டத்திலே இறுதிப் படலமாக வரும் பரசுராம கர்வ பங்கம் தான் இங்கே ஒரு சிறு பாட்டில் எவ்வளவு வேகமாக, எவ்வளவு வலிமையுடன் நினைவிற்குக் கொண்டு வரப்படுகிறது!

பாலகாண்டத்திலே இந்தக் 'கோடாலி ராமன்' தன் பெருமையைத் தானே பறை சாற்றுகிறான் ராமன் முன்பு. தசரதன் பயந்து மூர்ச்சித்துக் கிடக்கிறான்.

எனினும் சீதைக்குப் பயமில்லை. மலை போன்ற சிவ தனுசை முறித்த மகா வீர மல்லவா, காதலன் வடிவத்திலே நின்று பாதுகாக்கிறது?

மலை போன்ற வில்லைக் காதலிக்குச் சூட்டும் மணமாலை போலத் தூக்கி விட்ட அந்தக் காதலின் மகத்தான சக்தி, பக்கத்திலே நின்று எவ்வளவு அமைதியாக இளநகை யரும்புகிறது, பரசுராமனுடைய ஆர்ப்பாட்டங்களை நோக்கி!

சீதையின் காதிலே அன்று விழுந்த பரசுராம கர்ஜனை இது:

மூவெழு முறைமை,
பாரின் முடியுடை
வேந்தை யெல்லாம்
மேவெழு மழுவின்
வாயால் வேரறக்
களைகட்(டு), அன்னார்
தூவெழு குருதி
வெள்ளத் துறையிடை,
முறையின் எந்தைக்(கு)
ஆவன கடன்கள்
நேர்ந்தேன்!

[மூ எழு முறைமை - இருபத்தொரு முறை. பாரின் - உலகத்திலுள்ள. முடியுடை வேந்தை யெல்லாம் - முடி மன்னர்களை யெல்லாம். மேவு எழு மழுவின் வாயால் - விரும்பி எழுகிற கோடாலியின் கூர்முனையால். களை கட்டு - களை பறித்து. தூ - தசை. எழு குருதி - ஒழுகுகிற இரத்தம். குருதி வெள்ளத் துறையிடை - இரத்த வெள்ளத் துறையிலே. முறையின் - முறைப்படி. எந்தைக்கு - என் தந்தையாருக்கு. கடன்கள் - நீர்க்கடன்கள்; ஜலதர்ப்பணங்கள்.]

இந்தப் பாட்டைப் படித்து விட்டு, 'மழுவின் வாளினின்' என்று தொடங்கும் சுந்தரகாண்டப் பாட்டையும் படித்துப் பார்த்தால், கம்பனுடைய வாக்குவளம் எப்படி வளர்ந்து அதிகரித்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

தவ வலிமையும் ஜாதி கர்வமும் அருள் வலிமைக்கு முன் பணிந்து போனதையும், அறிவைப் புகைத்தெழுந்த பகைமை யுணர்ச்சி அமைதியும் பணிவும் தழுவிய பெரு வீரத்திற்கு முன் ஓடி ஒளிந்ததையும், சீதை இப்போது ஞாபகப்படுத்திக் கொள்கிறாள்.

வில்லை முறித்துத் தன்னை மணந்து கொண்ட அந்த வெற்றியைப் போல் பரசுராம கர்வபங்கமும் சீதை காதலின் வெற்றி தானே?

*   *   *

இப்படியெல்லாம் சீதை அங்குமிங்கும் மானஸ யாத்திரை செய்து வருந்திக் கொண்டிருந்த இந்த நள்ளிரவிலே, காவல் செய்யும் அரக்கியர் கள்ளுண்டு கருத்தழிந்து மெய்ம்மறந்து உறங்கலாயினர்.

அந்தக் கூட்டத்திலே விபீஷணனின் அருமைப் புதல்வியான திரிஜடையும் இருந்தாள். இவள் மட்டும் அந்த மதுபான விருந்திலும் கலந்து கொள்ளவில்லை; அந்த உறக்க மயக்கத்திற்கும் இடங்கொடுக்கவில்லை. சீதையும் துயர மிகுதியால் உணர்வு ஓய்ந்து மயக்கமடையும் நிலையை அடைந்தாள். அப்போது ஏதோ நன்னிமித்தம் நேர்ந்தது போலத் தோன்றியது.

இடது கண் முதலிய உறுப்புக்கள் துடிப்பதாகத் தோன்றியது. 'ஆம், காதலன் அந்த முனிவருடன் மிதிலை நகருக்கு வந்தபோது நேர்ந்த அதே நன்னிமித்தம், ஐயமில்லை' என்று எண்ணிக் கொண்டே மயக்க நிலையை உதறி விட்டுத் திரிஜடையை நோக்குகிறாள். அன்பு மிக்க இரு நெஞ்சங்கள் இப்படித் தம்முள் கலந்து கொள்ளும் அந்த அழகைத்தான் எவ்வளவு அழகாய் வெளிப்படுத்துகிறது கவிதை:

ஆயிடைத் திரிசடை
என்னும் அன்பினள்
தாயினும் இனியவள்
தன்னை நோக்கினள்,
'தூயை நீ கேட்டி, என்
துணைவி யாம்' எனா,
மேயதோர் கட்டுரை
விளம்பல் மேயினாள்.

[ஆயிடை - அப்பொழுது (சீதை). தூயை நீ - தூய்மையானவள் நீ. கேட்டி - கேட்பாயாக. எனா - என்று சொல்லி. மேயது ஓர் கட்டுரை - பொருந்திய (நன்னிமித்தம் குறித்த) ஒரு நன்மொழியை. விளம்பல் மேயினாள் - சொல்லத் தொடங்கினாள்.]

'இப்போது நேர்ந்த நன்னிமித்தத்தால் இங்கே என்ன நன்மைதான் விளையக் கூடுமோ?' என்று சீதை கேட்கவே, திரிஜடை சோபனம் சொல்லிப் பதில் சொல்லப் போகிறாள்.

சுந்தர ராமாயணம்

பி.ஸ்ரீ

422. நன்னிமித்தம்

இருவகை அமைப்பு

'வான்மீகி முனிவர் அசோக வனத்தின் இயற்கைக் காட்சிகளை இரண்டு அற்புதமான அத்தியாயங்களில் இணையற்ற முறையில் கற்பனை வளத்துடன் வரைந்திருக்கிறார்' என்று எனது மதிப்பிற்குரிய இலக்கிய நண்பர் ஒருவர் குறிப்பிட்டிருப்பது உண்மை தான். ஆனால், 'கம்பர் இந்தப் பாகத்தை அப்படியே தள்ளி விட்டார்' என்பதற்குக் காரணத்தை இங்கே இப்போது ஆராய வேண்டிய அவசியம் இல்லை.

வேறுபாடுகள்

அசோகவன வருணனைக்குப் பின் அனுமன் சீதையைக் கண்டதாகக் கூறி அந்தச் சிறையிருந்த சீதையையும் வருணிக்கத் தொடங்குகிறார் வால்மீகி என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். ஏனென்றால் கம்பனுடைய சீதை வருணனை அனுமன் இவளைக் காண்பதற்கு முன்பே வந்து விடுகிறது.

அசோக வனத்தில் அனுமன் ஓர் உபரிகையைச் சற்றுத் தூரத்தில் கண்டதாகவும், அது வெள்ளியங்கிரி போல் வெண்மையாய் வெகு உயரமாய்ப் பவளப் படிகளுடனும் தங்க மேடைகளுடனும் கண்ணைப் பறிக்குமாறு அமைந்திருந்ததாகவும், சிம்சுபா விருட்சத்திற்கு (நூக்கு மரத்திற்கு) அருகிலுள்ள அந்த உபரிகையில் சீதை இருந்ததைக் கண்டதாகவும் வால்மீகி சொல்லுகிறார். இந்த உபரிகையைக் குறித்துக் கம்பன் பிரஸ்தாபிக்கவே யில்லை.

திரிஜடையும் சீதையும் உரையாடிய பின்பு, சோர்ந்து உறங்கிக் கிடந்த அரக்கிமார் துயிலுணர்ந்தெழுந்து சீதையைச் சூழ்ந்து கொண்ட பின்புதான், அனுமன் அந்தக் கூட்டத்திற்கு நடுவில் உற்றுப் பார்த்துச் சீதையைக் கண்டு கொள்வதாகச் சொல்லுகிறான் கம்பன்.

வால்மீகியின் சீதை வருணனை, அனுமன் கவனித்துத் தனக்குள் தானே சொல்லிக் கொள்ளும் முறையில் அமைந்திருக்கிறது. கம்பனுடைய சீதை வருணனை கவிக் கூற்றாகவே அமைந்திருக்கிறது.

இரு வருணனைகளின் போக்கிலும் வேறுபாடு உண்டு. கம்பனுடைய வருணனை இக்கவிக்கே சிறப்பியல்பாகிய நாடகத் திறமையுடன் அமைந்திருக்கிறது.

உபவாஸத்தால் இளைத்து நாயகனையே தியானித்துக் கொண்டிருக்கும்

சீதையைப் பார்த்து அனுமன் முதல் முதல் மகிழ்ச்சி யடைந்ததாகவும், பிறகு துக்கித்ததாகவும் வால்மீகி கூறியுள்ளார். அப்பால் கண் கொட்டாமல் காவல் செய்து கொண்டிருக்கும் அரக்கிமார்களைக் குறித்துப் பிரஸ்தாபிக்கிறார்.

அதற்குப் பின் ராவணன் அசோக வனத்திற்கு வருவதும், அப்போது சீதையின் நிலைமையும், ராவணன் சீதையைப் பிரார்த்திப்பதும், சீதை ராவணனுக்கு நல்ல புத்திமதி சொல்வதும், அரக்கர்கோன் சீதையைப் பயமுறுத்துவதும் வருணிக்கப்படுகின்றன.

அதற்கு அப்பால் அரக்கிமார் குரூர வார்த்தைகள் கூறிச் சீதையைத் துன்புறுத்துவதும், சீதை துக்கிப்பதும், தான் உயிரை விடுவது அவசியமென்று பிரலாபிப்பதும் விவரிக்கப்படுகின்றன.

இந்த நிலையிலும் துஷ்ட ராட்சஸிகள் பயமுறுத்துகிறார்கள்; 'நீ தற்கொலை செய்து கொண்டு எங்களிடமிருந்து தப்பப் பார்க்கிறாயோ? உன்னை இப்போதே கொன்று தின்றுவிடப் போகிறோம்' என்றெல்லாம்.

இந்தச் சந்தர்ப்பத்திலே தான் திரிஜடை குறுக்கிடுகிறாள். அதுவரையில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அரக்கியர் சீதையை மிரட்டுவது கேட்டுத் திடீரென்று விழித்துக் கொள்கிறாள்.

அரக்கியரைப் பார்த்து, 'துஷ்டைகளே, இவளைத் தொட வேண்டாம். உங்களுக்குப் பசித்தால் உங்களுடைய உடம்பையே பிடுங்கித் தின்னுங்கள்! இப்போதுதான் நான் ஒரு பயங்கரமான கனவு கண்டேன். சீதையின் கணவருக்குச் சகல மங்களங்களும், அரக்கர்களுக்கு நாசமும் நெருங்கி யிருக்கின்றன' என்கிறாள்.

இதைக் கேட்டதும் முன்பு கோப பாவசர்களா யிருந்த அரக்கிமார் பயம் பிடித்தவர்களாய் எல்லாரும் திரிஜடையைச் சூழ்ந்து கொள்கிறார்கள். 'விடியற் காலத்தில் கண்ட கனவு வீண் போகாதே, அதை எங்களுக்கு விரிவாகச் சொல்லு' என்று வேண்டுகிறார்கள்.

அதுகேட்ட திரிஜடை தான் கண்ட கனவைச் சொல்லத் தொடங்குகிறாள் என்கிறது வால்மீகம். கம்பனோ திரிஜடை தான் கண்ட கனவைச் சீதைக்குச் சொல்வதாகக் கூறுகிறான்.

நன்னிமித்தமும் தீமைதருமோ?

திரிஜடையின் கனவிற்குப் பீடிகையாகத் தான் அரக்கிமார் உறங்கி மயக்கமடைந்து கிடப்பதையும், அப்போது சீதை திரிஜடையை நோக்கி, 'தூயவளே, என்தோழியே!' என்று கூப்பிட்டுத் தனக்கு நேர்ந்த நன்னிமித்தத்தைத் தெரிவிப்பதையும் கவிஞன் பிரஸ்தாபிக்கிறான்.

தனக்கு இடது கண் முதலிய உறுப்புக்கள் துடிப்பதாகத் தோன்றியதும், அது நன்னிமித்தம் என்பதும் சீதைக்குத் தெரிந்தனவே. பெண்களுக்கு இடப் பக்கமும் ஆடவர்க்கு வலமும் துடிப்பது நன்னிமித்தம் என்பது சகுன சாஸ்திரம். இதில் சீதைக்கு நம்பிக்கை உண்டு.

எனினும் 'இந்த நன்னிமித்தமும் நன்மை தரப் போகிறதா? அல்லது எனக்கு நன்னிமித்தமும் துர் நிமித்தம் போல் துன்பம் தான் விளைவிக்கப் போகிறதா?' என்கிறாள் சீதை திரிஜடையை நோக்கி:

நலம்துடிக் கின்றதோ?
நான்செய் தீவினை
சலம்துடித்(து) இன்னமும்
தருவ துண்மையோ?
பொலந்துடி மருங்குலாய்!
புருவம், கண், நுதல்
வலம்துடிக் கின்றில!
வருவ(து) ஓர்கிலேன்.

[நலம் துடிக்கின்றதோ- நன்மைதான் என்னை நோக்கி விரைகின்றதோ. தீவினை சலம் துடித்து-தீவினையானது வஞ்சனையாக (இடம்) துடிக்கச் செய்து.

இன்னமும் தருவது உண்மையோ - இனியும் எனக்குத் துன்பம் தான் தரப்போகிறதோ. பொலந்துடி மருங்குலாய் - அழகிய உடுக்கை போன்ற இடையை உடையவளே; (இங்கே) திரிஜடையே. புருவம், கண், நுதல் - புருவமும் கண்ணும் நெற்றியும். வலம் துடிக்கின்றில - வலப்பக்கம் துடிக்கவில்லை, வருவது ஓர்கிலேன் - இதனால் வரப் போகும் பயன் இன்னதென்று அறிந்து கொள்ள முடியவில்லையே.]



பொன் மானாக வந்த மாரீசனது வஞ்சனை, சந்நியாசியாக வந்த ராவணனது வஞ்சனை முதலியவற்றால் ஏற்கெனவே வஞ்சிக்கப்பட்டிருந்ததால், 'நன்னிமித்தம் கூட என்னை வஞ்சிக்கப் பார்க்கிறதோ?' என்று கேட்கிறாள்.

இடப் பக்கமே துடிக்கிறதென்றாலும் அதை அப்படிக் கூறாமல், 'வலம் துடிக்கின்றில' என்று கூறுவது கவனிக்கத் தக்கது. ஏனென்றால் துன்பத்திற்கு மேல் துன்பமாகத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் காலமெல்லாம் வலம் துடித்த அனுபவம் தானே! இப்போதுள்ள கஷ்ட மிகுதியில் அப்படி வலம் துடிக்காமல் இடம் துடிப்பது கண்டு அதிசயித்துத் தான் 'வழக்கம் போல் வலப்பக்கம் துடிக்கவில்லையே, எனக்குமா நன்மை வரப் போகிறது?' என்கிறாள்.

காதலர் அந்த முனிவருடன் மிதிலை நகருக்கு வந்த போது நேர்ந்த அதே நன்னிமித்தமல்லவா இப்போதும் நேர்ந்திருக்கிறது? இதையும் திரிஜடையிடம் தெரிவித்து இந்த நிமித்தத்தின் பயனை ஆராய்ந்து சொல்லும்படி வேண்டுகிறாள் :

முனியொடு மிதிலையின்
முதல்வன் வந்தநாள்
துனியறு புருவமும்
தோளும் நாட்டமும்

இனியன துடித்தன ;
ஈண்டும் ஆண்டென
நனி துடிக் கின்றன ;
ஆய்ந்து நல்குவாய்.

[முனியொடு—விசுவாமித்திர முனிவருடனே. மிதிலையின் — மிதிலைக்கு. முதல்வன் — தலைவனுகிய ராமன். வந்த நாள் — வந்த பொழுது. தனிஅறு — குற்றமற்ற. நாட்டமும் — கண்ணும். இனியன — இனியனவாய்; இனிமை தருவனவாய். துடித்தன — இடம் துடித்தன. ஈண்டும் — இப்பொழுதும். ஆண்டு என—அப்போது துடித்தாற் போலவே. நனி துடிக்கின்றன — நன்ருக இடம் துடிக்கின்றன. ஆய்ந்து நல்குவாய் — இதன் பொருளையும் பயனையும் ஆராய்ந்து எனக்குச் சொல்வாயாக.]

அந்த விவாக காலத்திற்குப் பின்பு அத்தகைய நன்னிமித்தம் இந்த இலங்கையில் இந்த அசோகவனச் சிறையிலே தான் ஏற்படுகிறதாம்.

சீதை அதிசயமாக இதைச் சொன்ன பின்புதான், தனக்குக் கேடு வந்த போதெல்லாம் வலம் துடிப்பது வழக்கம் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்கிருள்.

தீமைக்கு அறிகுறியாக வலம் துடித்ததை இரண்டு கவிகளில் கூறுகிருள்.

'முன்னே நான் சொல்லியிருக்க வேணும். மறந்து விட்டேன்' என்ற பீடிகையுடன் காடு புகுந்த நாளில் வலம் துடித்த துர்நிமித்தத்தைத் தெரிவிக்கிருள் :

மறந்தனென், இதுவும்ஓர்
மாற்றம் கேட்டியால் ;
அறம்தரு சிந்தைஎன்
ஆவி நாயகன்
பிறந்தபார் முழுவதும்
தம்பி யேபெறத்
துறந்துகான் புகுந்தநாள்
வலம்து டித்ததால்.

[இதுவும் ஓர் மாற்றம்-இந்த ஒரு வார்த்தையையும். கேட்டி-கேட்பாய். ஆவி நாயகன்-உயிரோடு ஒத்த கணவன். பிறந்த பார்-தனக்கே பிறப்புரிமையாக அமைந்துள்ள மகாராஜ்யம். கான் - காடு.]

இவர்கள் காடு புகுந்தபோது தோன்றிய துர்நிமித்தம், காட்டிலே ராவண சந்நியாசி வஞ்சனை இழைத்த போதும் தோன்றியது என்றும் திரிஜடையிடம் தெரிவிக்கிருள்.

தெரிவித்து, 'இப்போது இடம் துடிக்கிறதே, இங்கே நலம் விளைவதற்கு யாதொரு வழியும் இல்லையே' என்கிருள்.

ஆம், நன்மைதான்

இதற்குத்தான் திரிஜடை 'சோபனம்' சொல்லுகிருள் :

என்றலும் திரிசடை,
'இசைந்த சோபனம்
நன்(று)இது, நன்(று)'என,
நயந்த சிந்தையாள்,
'உன்துணைக் கணவனை
உறுதல் உண்மையால் ;
அன்றியும் கேட்டி' என்(று)
அறைதல் மேயினள்.

[என்றலும் - என்று சீதை சொன்னவளவில். சோபனம் - மங்களக் குறி. என - என்று சொல்லி. நயந்த சிந்தையாள் - சீதையிடம் அன்பு வைத்த சிந்தையுடையவளாய். உறுதல் - நீ அடைதல். அன்றியும் கேட்டி - இது அல்லாமலும் நான் சொல்வதைக் கேட்பாயாக. அறைதல் மேயினள் - சொல்லத் தொடங்கினள்.]

சீதை தனக்கு நேர்ந்த நன்னிமித்தம் சொல்லத் திரிஜடை தனக்கு நேர்ந்த நன்னிமித்தம் ஒன்றையும் எடுத்துக் காட்டப் போகிருள், காட்டி அதன் பொருளையும் சொல்லப் போகிருள்.

சீதைக்கு நேர்ந்த நன்னிமித்தத்திற்குத் திரிஜடை கண்ட நன்னிமித்தம் அரண் செய்கிறது. பிறகு தான் திரிஜடை தான் கண்ட கனவுகளைச் சொல்லப் போகிருள்.



423. கனக் கதைகள்

சீதை தான் கண்ட நன்னிமித்தத்தைத் திரிஜடைக்குத் தெரிவித்தாள். திரிஜடையும் தான் சீதையிடம் கண்ட நன்னிமித்தம் ஒன்றை இவளிடம் எடுத்துக் கூறுகிறாள்:

உன்நிறம் பசப்புற,
  உயிர்உ யிர்ப்புற,
இன்னிறந் தேனிசை
  இனிய நண்பினாள்,
மின்நிற மருங்குலாய்!
  செவியின் மெல்லெனப்
பொன்நிறத் தும்பிவந்(து)
  ஊதிப் போயதால்.

[பசப்புற — பசுமை அடைய. உயிர்ப்பு—உயிர்த்தல். இன் நிறத்தேன் — (கண்ணுக்கு) இனிய நிறத்தையுடைய தேன். தேன் இசை — தேன் போன்ற இசை. மின்நிற மருங்குலாய் — மின்னலின் நிறத்தையுடைய இடையோடு கூடிய சீதையே. செவியின் -காதில். பொன் நிறத் தும்பி — பொன் வண்டு.]

'பொன்வண்டு ஒன்று மெல்லென வந்து தேன் போன்ற இன்னிசையை உன் காதில் ஊதிப் போயிற்று' என்று திரிஜடை சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அனுமன் அசோக வனத்திற்குள் வந்துவிட்டான். வந்து மெல்லெனச் சீதையைத் தேடிக் கொண்டு தான் இருக்கிறான், செய்தி சொல்ல வேண்டுமென்று.

கனவிலே துர் நிமித்தங்கள்

பிறகு திரிஜடை தான் கனக்கண்டதையும் சொல்லத் தொடங்குகிறாள்,

துயில் இலை ஆதலின்
  கனவு தோன்றல!



[துயில் இலை ஆதலின் - நான் பெரும்பாலும் தூக்கம் இல்லாதவளாயிருப்பதால். கனவு தோன்றல- கனக்கள் தோன்றவில்லை.]

என்ற பீடிகையுடன்.

சீதையைத் தான் இந்த விபீஷண புத்திரி எவ்வளவு ஜாக்கிரதையாக, எவ்வளவு அன்புடன் பாதுகாத்து வருகிறாள் என்பதி குறிப்பு.

'அரக்கியர் சீதையைப் பயமுறுத்தாமலிருக்க

வேணுமே' என்ற கவலையுடன் பல இரவுகளிலும் தூங்காமல் இருந்த திரிஜடை இன்று நள்ளிரவில் சற்றுக் கண்ணயர்ந்து விட்டாள். கண்ணயர்ந்ததும் கனுக் கண்டாளாம்.

திரிஜடை தான் கனவில் கண்ட துர் நிமித்தங்களை எடுத்துச் சொல்லுகிறுளே அந்தச் சொற்களைக் கவிஞன் 'வெயிலினும் வெய்யன' — அதாவது கொடிய வெயிலைக் காட்டிலும் வெப்பமான சொற்கள் — என்கிறுன்.

ஆனுல் இந்தக் கொடிய சொற்கள் எவ்வளவு இனிமையாகச் சீதை காதில் விழத் தொடங்குகின்றன!

எண்ணெய்,பொன் முடிதொறும்
இழுகி, ஈறிலாத்
திண்நெடுங் கழுதைபேய்
பூண்ட தேரின்மேல்
அண்ணல்அவ் இராவணன்,
அரத்த ஆடையன்,
நண்ணினன் தென்புலம்,
நவையில் கற்பினுய்!

[எண்ணெய் பொன்முடி தொறும் இழுகி — எண்ணெயைத் தன் அழகிய பத்துத் தலைகளிலும் தேய்த்துக் கொண்டு. ஈறிலா — முடிவில்லாத. திண் நெடுங்கழுதை — பெரிய முரட்டுக் கழுதை. அரத்த ஆடையன் — இரத்த நிற ஆடையை உடுத்துக் கொண்டவனுய். நண்ணினன் — சென்றுன். தென்புலம் — தெற்குத் திக்கிலே. நவையில் கற்பினுய் — குற்றமில்லாத கற்பினை யுடைய சீதையே.]

என்று திரிஜடை கனுக்கண்டதாய்ச் சொல்லத் தொடங்கியதும், சீதை தன்னை அறியாமலே வசீகரிக்கப் பெற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள் என்று கருதலாம்.


அந்தப் பொன்முடிகளையும் அந்தப் பெருமிதம் ததும்பிய முகங்களையும் அந்த நிலையில் கண்ட திரிஜடை, அவனுேடு அருமைப் பிள்ளைகளும் பந்துஜனங்களும் வேறு அரக்கர்களும் வழியனுப்புவது போலப் போய்க் கொண்டிருந்ததையும் பார்த்து விட்டாளாம்.

ஆனுல் அப்படிப் போனவர்களெல்லாம் திரும்பி வரவில்லை. 'அந்தத் திக்கையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன்' என்கிறுள்.

மக்களும் சுற்றமும்
மற்று ளோர்களும்
புக்கனர் அப்புலம்,
போந்த தில்லையால்;
சிக்கற நோக்கினென்;
தீய இன்னமும்
மிக்கன கேட்கென
விளம்பல் மேயினுள்.

[மற்றுளோர்களும் — வேறு அரக்கர்களும். புக்கனர் — சென்றுர்கள். அப்புலம் — அந்தத் திக்கிலே. போந்தது இல்லை — திரும்பி வரவில்லை. சிக்கற — தவற விடாமல். நோக்கினென் — நோக்கினேன். தீய — கொடியவை. மிக்கன — மிகுந்துள்ளவற்றை. கேட்க என - கேட்பாயாக என்று. விளம்பல் மேயினுள் - அவற்றையும் சொல்லத் தொடங்கினுள்.]

'எங்கே போய்விட்டார்கள் அந்த ஆசாமிகளெல்லாம்!' என்று திரிஜடை திகைத்துக் கொண்டிருக்கும் போதே, பேரிகைகள் முழக்குவோரில்லாமல் தாமே முழங்கினவாம். மேக மில்லாமல், மின்னல் இல்லாமல் இடியிடித்ததாம், வானமே வெடித்து விட்டது போல்.



நட்சத்திரங்களெல்லாம் ஒன்று பாக்கி யில்லாமல் அப்படியே உதிர்ந்து விழுந் தனவாம். என்ன பயங்கரமான சொப் பன உற்பாதங்கள்!

பிடிமதம் பிறந்தன;
பிறங்கு பேரியும்
இடியென முழங்குமால்
இரட்டல் இன்றியே;
தடியுடை முகிற்குலம்
இன்றித் தாவில்வான்
வெடிபட அதிருமால்;
உதிரும் மீனெலாம்.

[பிடிமதம் பிறந்தன - பெண் யானை கள் மதநீர் ஒழுகப் பெற்றன. பிறங்கு - விளங்குகின்ற பேரி - முரச வாத்தி யங்கள். இரட்டல் இன்றியே - அடித் தல் இல்லாமலே. தடிஉடை - மின்ன லையுடைய. முகில் குலம் - மேகக் கூட் டம். தாவில் வான் - கெடுதல் இல்லாத வானம். மீன் எலாம் - நட்சத்திரங்கள் எல்லாம்.]

திடீரென்று இலங்காபுரியும் கோட்டை மதில்களும் பம்பரம்போல் சுழன்றன. திக்குக்கள் தீப்பற்றி எரிந் தன. விளக்கு இருட்டை விழுங்குவ தற்கு மாறாக இருட்டே விளக்கை விழுங்கியது!

பூர்ண கும்பங்களில் ராட்சஸப் பிராம் மண வைதிகர்கள் பரிசுத்த தீர்த்தத்தை மந்திரித்து வைக்க அது கள்ளாகிப் பொங்கத் தொடங்கி விட்டது, மது விலக்கு விரோதிகளான அரக்கர்களுக்கு அப்படியே உத்ஸாகம் பொங்குவது போலே!

போர்க் கருவிகளெல்லாம், போர் வீரர்கள் கையிலெடுத்துப் போர் புரியாம லிருக்கும்போது, தாமே ஒன்றோடொ ன்று ஜண ஜண வென்று தாக்கிப் போர் புரியத் தொடங்கிவிட்டன, வானம் இரத்த மழை பொழிந்தது. தோரணங்கள் இற்று முறிந்தன. அரக்க மகளிரின் தாலிச் சரடுகள் அற்று விழுந்தன.

மகாராணி மண்டோதரியின் பின் னிய கூந்தல் தானே அவிழ்ந்து விழுந்தது. பக்கத்திலிருந்த பெரிய விளக்கின் ஜ்வாலை படக் கூந்தல் சுறு சுறு வென்று எரியத் தொடங் கியது.

திரிஜடை அப்படியே பிரமித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். சீதை அப்படியே பிரமித்துக் கேட்டுக் கொண் டிருக்கிறாள். ஆம், வெயிலைக் காட்டிலும் கொடிய வெப்பம் வீசிய அந்த வார்த்தை களைத் தான்; திரிஜடை கண்ட பயங் கரமான அந்தக் கனாக் காட்சிகளைத் தான்.

திரிஜடையின் முக்கியமான கனவு

'இன்னும் சொல்லுகிறேன் கேளம்மா!' என்று திரிஜடை மேலும் சொல்லுகிறாள். 'இன்றைக்கு இந்த இடத்தில் இப்போது தான் வேறொரு சொப்பனம் கண்டேன்' என்று அதை யும் சொல்லத் தொடங்கி விடுகிறாள்:

என்றனள் இயம்பி,வே(று)
இசைப்பக் கேட்டியால்:
இன்(று)இவண் இப்பொழு(து)
இயைந்த(து) ஓர்கனா:
வன்றுணைக் கோளரி
இரண்டு, மாறிலாக்
குன்றிடை, உழுவையங்
குழுக்கொன்(டு) ஈண்டியே—

[இசைப்ப — சொல்ல. கேட்டி — கேட்பாயாக. இவண் - இவ்விடத்தில். வன்றுணை — வல்துணை. வல் — வலிய. துணை — ஒன்றுக்கொன்று துணையான. கோளரி — ஆண் சிங்கங்கள். மாறிலாக் குன்றிடை — ஒப்பில்லாததொரு குன் றிலே. உழுவை — புலி. உழுவையங் குழு — கண்ணுக்கு அழகாய்த் தோன்று



கிற புலிக்கூட்டம். ஈண்டி — சேர்ந்து வந்து.]

இப்படி ஆரம்பிக்கும் சொப்பனக் கதை சீதையை எப்படி வசிகரித்திருக்க வேண்டும்! 'இரண்டு சிங்கங்கள் ஒன்றுக்கொன்று துணையாகப் புறப்பட்டன' என்று ஆரம்பித்ததுமே, பளிச் சென்று சீதையுள்ளம் புருஷ ஸிம்மங்களாகிய ராம லட்சுமணர்களை நினைத்திருக்க வேண்டும்.

'அந்தச் சிங்கங்கள் குன்றுகளிடையே வந்து சேர்ந்தன. புலிகள் நிறைந்த குன்றுகள் அவை. அந்தப் புலிக் கூட்டத்தையும் சிங்கங்கள் தங்களுக்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டன. பிறகு அங்கேயிருந்து புறப்பட்டன' என்கிறாள் திரிஜடை.

கனக் கதையின் இப்பகுதி சீதைக்குப் புரிந்திருக்க முடியாது. கிஷ்கிந்தாபுரி வாசிகளான வானர வீரர்களை ராம லட்சுமணர்கள் சேர்த்துக் கொண்டு இலங்கை நோக்கியதை இவள் எப்படி அறிவாள்?

சீதை திகைப்புடன் கதைகேட்கிறாள். திரிஜடை மேலும் சொல்லுகிறாள்: 'ஒரு பெரிய காடு. யானைகள் நிறைந்த காடு. அந்தக் காட்டு யானைகளுக்கெல்லாம் மதம் பிடித்திருந்தது. அந்த மதத்திற்கு அளவே கிடையாது. அந்த யானைக் கூட்டங்களுக்கும் அளவில்லை.'

இலங்காபுரியையும் மதங் கொண்ட அரக்கர்களையும் தான் திரிஜடை அப்படி மத யானைகளாகக் கண்டாள் என்று சீதை ஊகித்திருக்கக் கூடும்.

இந்த ஊகத்துடன் எத்தகைய ஒருமையுள்ளத்தோடு சீதை கவனித்துக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்! திரிஜடையோ அந்தக் கனவை அப்படியே இப்போதும் காட்சியாகக் கண்முன் காண்பதுபோல் பேசிக் கொண்டிருக்கிறாள்:

'அப்பேர்ப்பட்ட காட்டுக்கு வந்து சேர்ந்து விட்டன இரண்டு சிங்கங்களும், புலிக்கூட்டம் தொடர்ந்து வர, காட்டை வளைத்துக் கொண்டன. யானைக் காடு பிணக்காடாகி விட்டது.'

திரிஜடை சொப்பனத்தை அப்படியே முடித்து விடாமல், 'அப்பால் அந்தக் காட்டிலிருந்து ஒரு மயில் வெளியே போயிற்று' என்கிறாள்.

என்ன அதிசய வசீகரம் வாய்ந்த சொப்பனம்!

வரம்பிலா மதகரி
  உறையும் அவ்வனம்
நிரம்புற வளைந்தன,
  நெருக்கி நேர்ந்தன.
குரம்பறு பிணம்படக்
  கொன்ற; மாறிலாப்
புரம்புக இருந்ததோர்
  மயிலும் போயதால்!

[வரம்பிலா - அளவில்லாத. மதகரி - மதத்தையுடைய யானைகள். உறையும் - வசிக்கிற. நிரம்புற - நிரம்புதல் பொருந்த; சிறிதும் விடாமல். நேர்ந்தன - எதிர்த்தனவாய். குரம்பறு - எல்லையற்ற. மாறிலாப் புரம் — பகையில்லாத பட்டணம்: அயோத்தி.]

என்கிறாள் திரிஜடை.

மயிலா? — என்ன, இவளுடைய பிரதி பிம்பம் தானா? அந்தச் செய்தி — அந்த விடுதலை — எப்படிக் கவர்ந்திருக்க வேண்டும் சீதையுள்ளத்தை!

சரி, மயில் எங்கே போகிறது? அதைக் குறித்து இன்னும் விவரமாய்த் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறது சீதையுள்ளம். ஆனால் திரிஜடையின் உள்ளத்தையோ வேறொரு சொப்பனக் காட்சி கவர்ந்து விட்டது.

'அதே சமயத்தில் வேறொரு காட்சி என் கவனத்திற்கு இலக்காயிற்று' என்ற குறிப்புடன் திரிஜடை அந்தக் காட்சியை ஆச்சரியமாக வருணிக்கப் போகிறாள். அதை நாம் பார்ப்பது அடுத்த வாரம்தான்.

* * *

அரக்கிமார் உறங்கிக் கிடப்பதால் திரிஜடையும் சீதையும் பேசிக் கொள்வது அவர்கள் காதில் விழவே யில்லை.

சுந்தர ராமாயணம்

பி.ஸ்ரீ

124. கனவு முடிந்ததில்லை

ஆயிரம் கிளை விளக்குகள் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கின்ற ஒரு பெரிய அலங்கார தீபம். ஆஹா, எவ்வளவு தூரம் ஒளி வீசுகிறது! அருளில் கிளைத்தெழும் அறச் செயல்கள் துஷ்ட உலகில் பிரகாசிப்பது போல.

தீபம் தீபத்தை ஏந்துவதுபோல், அந்தத் தீபத்தை ஒரு பெண்மணி கையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய சிவந்த மேனியும் தீச் சுடர் போல் ஜொலிக்கிறது.

கனக் குறையும் மனக் குறையும்

காட்டிலிருந்து மயில் வெளிப்படுகிறதே அதே சமயம் தீபம் ஏந்திய தோகையும் அரண்மனையிலிருந்து வெளிப்படுகிறாள். அவளைத் தொடர்கின்றது திரிஜடை மனம் தன்னையறியாமலே.

திரிஜடை கனவுதான் இது — கனவின் ஸாரமான, அழகு மயமான பகுதி, எவ்வளவு அதிசயமாக, எவ்வளவு அழகாக இக்கனவு வெளிப்படுகிறது,—எத்தகைய இசைத் தமிழிலே!


ஆயிரம் திருவிளக்(கு)
அமைய மாட்டிய
சேயொளி விளக்கமொன்(று)
ஏந்திச் செய்யவள்,
நாயகன் திருமனை
நின்று, நன்னுதல்
மேயினள் வீடணன்
கோயில், மென்சொலாய்!'

[சேய் ஒளி விளக்கம்-வெகு தூரம் ஒளி வீசும் பெரு விளக்கு. செய்யவள்-சிவந்த நிறமுள்ளவள்; ராஜ்ய லட்சுமி. நாயகன்-சக்ரவர்த்தியாகிய ராவணன். மேயினள்-அடைந்தாள். வீடணன்-விபீஷணன். கோயில்-அரண்மனை. மென்சொலாய்-மென்மையான சொற்களையுடைய சீதையே.]

இவ்வளவு சுவாரஸ்யமாகத் திரிஜடை சொல்லி வரும்போது, திரிஜடையின் மனம்தான் அந்தச் சொப்பன சுந்தரி மீது அப்படி ஈடு பட்டிருந்தது. சீதை மனமோ தப்ப முயன்ற அந்த மயிலையே நினைத்துக் கொண்டு தொடர்ந்து செல்ல விரும்பியிருக்க வேண்டும்.

ராஜ்ய லட்சுமி ராவணனுடைய அரண்மனையிலிருந்து விபீஷணனுடைய அரண்மனைக்குச் சென்றது திரிஜடையின் கவனத்தைக் கவர்ந்தது போல் சீதையின் கவனத்தைக் கவர்ந்திருக்க முடியாதல்லவா?

சீதை நெஞ்சோ படபடத்துக் கொண்டிருக்கிறது, 'அந்த மயிலை அப்படியே விட்டு விட்டாளே; இன்னும் ஏதாவது



சொல்லப் போகிறாளா, மாட்டாளா?' என்று.

'ஸாக்ஷாத் மகாலட்சுமி போன்ற அந்தப் பெண், அந்தப் பெரிய அலங்கார தீபத்தோடு எங்கள் மாளிகைக்குள் பிரவேசித்த சமயத்தில் நீ என்னை எழுப்பி விட்டாய். ஆகையால் என் கனவு முடிந்தபாடில்லை யம்மா!' என்று திரிஜடை குறைபாடு கூறினாள். கூறி முடித்ததும் சீதை என்ன கூறுகிறாள், என்ன செய்கிறாள் தெரியுமா?

இதோ பார்த்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்:

'பொன்மனை புக்கஅப்
  பொருவில் போதினில்,
என்னைநீ உணர்த்தினை:
  முடிந்த தில்'என,
'அன்னையே, அதன்குறை
  காண்!' என்(று) ஆயிழை,
'இன்னமும் துயில்க'என
  இருகை கூப்பினாள்.

[பொன் மனை - பொன் மயமான அரண்மனை. புக்க - புகுந்த. பொருவில் - ஒப்பில்லாத. உணர்த்தினை - துயில் எழுப்பினாய். இல் - இல்லை. ஆயிழை - (இங்கே) சீதை. துயில்க - தூங்குவாயாக.]

கனவின் குறை திரிஜடைக்கும் ஒரு மனக்குறைதான். சீதையோ பச்சாத்தாபப் படுகிறாள், 'என்னுடைய பிசகினால் அல்லவா இந்தக் கனா முடியவில்லை? மயிலின் விடுதலைச் செய்தி காதில் விழவில்லையே—மயில் ராஜ சிங்கங்களை அடைந்து அயோத்தியா பட்டணம் திரும்பிய அந்தக் குறைச் செய்தி!' என்றெல்லாம்.

இந் நிலையில், திரிஜடையின் தாயன்பைப் பெரிதும் பாராட்டுகிற சீதை, 'அன்னையே, அந்தச் சொப்பனத்தின் குறையை நீ எப்படியாவது எனக்காகத் தொடர்ந்து போய்க் கண்டு பிடித்துவிட வேண்டும். அதற்காக நீ இன்னமும் தூங்கு; இனி நான் உன்னைத் தொந்தரவு செய்ய மாட்டேனம்மா!' என்று இரண்டு கைகளையும் கூப்பித் தொழுகிறாளாம்.

சீதை குறுநீசயம்

சீதையின் தங்கமான குழந்தையுள்ளம் எப்படி இங்கே வெளிப்படுகிறது பாருங்கள்! அயோத்திக் கோட்டை வாசலைத் தாண்டினாளோ இல்லையோ, 'எங்கே காடு? வந்து விட்டோமா, என்ன?' என்று கணவனைக் கேட்ட அதே குழந்தை யுள்ளம்.

அதற்கும் முன்பே, இந்தக் குழந்தையுள்ளத்தைத் தெரிந்து கொண்டிருந்த ராமன், 'ஏதோ திருக்குற்றாலம் பார்த்து விட்டு அடுத்த ரயிலில் திரும்பி வருவது போல'ப் பேசி விடை கொள்ளப் பார்த்தான். அது பலிக்கவில்லை யென்று

தெரிந்ததும், வனத்தை வசீகரமான திருக்குற்றாலமாக்கிக் காட்டாமல் அரக்கர் போல் படுத்துக் கிடக்கும் மலைகளையுடைய கொடிய காடாகக் காட்டினான். ஆனால் அந்த ராட்சஸ மலைகளும் வெப்பமான காடுகளும் கூட இந்தக் குழந்தையுள்ளத்தைப் பயமுறுத்தவில்லை.

பூச்சாண்டிக்குப் பயப்படாத குழந்தை போலச் சீதை, 'பிரிவினும் சுடுமோ பெருங்காடு?' என்று பதில் சொல்லி விட்டாள்.

இந்தக் 'குழந்தை'யை எப்படித்தான் காட்டுக்கு அழைத்துப் போவது என்ற ஆலோசனையில் ராமன் தன்னை இழந்திருக்கும் போதே, சீதையின் குழந்தையுள்ளம், விநோதக் காட்சிப் பொருளாக வைத்திருந்த மரவுரியை எடுத்து, ஏதோ ஓர் ஆபரணத்தால் அலங்கரித்துக் கொள்வது போல் அம்மரவுரியால் தன்னை அலங்கரித்துக் கொண்டு ஒரு வெற்றிப் புன்னகையும் புரிந்து விட்டது.

இதே குழந்தையுள்ளம் தான், தன்னையும் ராமலட்சமணரையும் காட்டில் விட்டு மிக்க மன வருத்தத்துடன் விடைபெற்றுக் கொள்ளும் சுமந்திரனிடம் சற்றும் துயரப்படாமல், தான் அரண்மனையில் விட்டு வந்த மைனாவையும் கிளியையும் பாலூட்டிச் சீராட்டிப் போற்ற வேண்டுமென்று தன் தங்கைமாருக்குச் செய்தி சொல்லிற்று.



சுமந்திரன் அழுது புரண்டு புலம்ப ராமன் அவனைத் தழுவிக் கொண்டு அறம் சொல்லி ஆறுதல் சொன்னதற்கும், லட்சுமணன் கனன்று பொங்கும் நெருப்பைப் போல் தந்தை மீதும் தம்பி பரதன் மீதும் சினந்து சீறிப் பேசியதற்கும் இடையே, வெளிப்பட்டது சீதையின் குழந்தையுள்ளம், தென்றல் போலத் தமிழிசை போல:

அன்னவள் கூறுவாள்,
'அரசற்(கு) அந்தையற்(கு)

என்னுடை வணக்கம்முன்
இயம்பி, யானுடைப்
பொன்னிறப் பூவையும்
கிளியும் போற்றுமின்
என்னமந்(று) எங்கையர்க்(கு)
இயம்புவாய்' என்றாள்.

[அன்னவள் - அந்தச் சீதை. அரசற்கு - மாமனாராகிய தசரத அரசருக்கு. அத்தையர்க்கு - மாமியாருக்கு. பூவை - மைனா. போற்றுமின் என்ன - போற்றுங்கள் என்று. எங்கையர்க்கு - என் தங்கைமாருக்கு. இயம்புவாய் - சொல்லுவாய்.]

இந்தக் கிளியைத்தான் சீதை இனிமேல் (சூளாமணிப் படலத்தில்) 'என் ஓர் இன்னுயிர் மென்கிளி' என்று குறிப்பிடப்போகிறாள். இந்தக் கிளிக்குக் 'கைகேயி' என்றே பெயர்!

'யார் பெயரை இடலாம்?' என்று இவள் கேட்க, ராமன் கைகேயியின் பெயரை இடும்படி அன்போடு சொன்னானும்.

எனவே சீதை குணாதிசயத்தை எவ்வளவு நன்றாக ஞாபகப் படுத்துகிறது பாருங்கள்,

'அன்னையே, அநந்துறை
கான்'என்(று) ஆயிழை,
'இன்னமும் துயில்கி'ன,
இருகை கூப்பினாள்.

என்ற வாக்கு!

நாடகத் திறன்

கனவின் குறையைக் குறித்துச் சீதையும் திரிஜடையும் உரையாடிக் கொண்டிருக்கும்போதே அந்தக் குறையை அனுமன் எப்படி நிறை செய்கிறான் பாருங்கள் :

இவ்விடை அண்ணல்அவ்
இராமன் ஏவிய
வெவ்விடை அனையபோர்
வீரத் தூதனும்
அவ்விடை எய்தினன்,
அரிதின் நோக்குவான்,
நொவ்விடை மடந்தைதன்
இருக்கை நோக்கினான்.

[இவ்விடை - இதே சமயத்தில். வெவ்விடை அனைய - கொடிய பலம் பொருந்திய காளை போன்ற. போர் வீரத் தூதனும் - போரில் வல்ல வீரமுள்ள தூதனாகிய அனுமனும். அவ் இடை எய்தினன் - அந்த இடத்தை அடைந்து. அரிதின் - அருமையாக. நொவ்விடை மடந்தைதன் - வருந்துகின்ற இடையை யுடைய சீதையின். இருக்கை நோக்கினான் - இருப்பிடத்தைச் சற்றுத் தூரத்திலிருந்து நோக்கினான்.]

இதே சமயம், சோர்ந்து உறங்கிக் கிடந்த அரக்கியர்களும் துயிலுணர்ந்தெழுந்து சீதையை நோக்கிய வண்ணம் எல்லாப் பக்கங்களிலும் திரண்டெழுந்து ஆயுதங்களைக் கையில் தூக்கிக் கொள்கிறார்கள் :

அவ்வயின் அரக்கியர்
அறிவுற்(று), 'அம்ம!ஓர்
செவ்வையில் துயில்நமைச்
செகுத்த(து) ஈதெ'ன,
எவ்வயின் மருங்கினும்
எழுந்து விங்கினார்,
வெவ்வயில் மழுஎழுச்
சூல வெங்கையார்.

[அவ்வயின் - அப்பொழுது. அறிவுற்று - துயிலுணர்ந்து. அம்ம - ஆச்சரியக் குறிப்பு. செவ்வையில் - செவ்வையில்லாத. நமை - நம்மை. செகுத்தது - கெடுத்தது. ஈது - இந்தத் தூக்கம். எவ்வயின் மருங்கினும் - எல்லாப் பக்கங்களிலும். விங்கினார் - திரண்டார்கள். வெவ்வயில் - கொடிய வேலாயுதங்களையும். மழு - கோடாலிகளையும். எழு - வளை தடியும். சூல வெங்கையார் - சூலங்களையும் கொடிய கைகளில் கொண்டவர்களாய்.]

'கனாக்குறை முடிந்ததில்லையே' என்று திரிஜடை கூறுவதும், அனுமன் அந்த இடத்தை நோக்கி வருவதும், சிறைக்காவலாக உள்ள அரக்கியர் திடீரென்று விழித்துக்கொண்டு ஆயுதங்களுடன் சீதையைச் சூழ்ந்து கொள்வதும் ஒரே சமயத்தில் நிகழ்கின்றன.

சுந்தர ராமாயணம்

பி.ஸ்ரீ

425. வால்மீகி கண்ட திரிஜடை கனவு

'இப்பொழுது என்னால் ஒரு கனவு உண்மையாய்க் காணப்பட்டது. நினைத்தால் பயங்கரமாயிருக்கிறது; ரோமம் சிலிர்க்கிறது. அரக்கர்களின் அழிவைப் பற்றியது. இவளுடைய கணவனின் வெற்றியைப் பற்றியது' என்ற பீடிகையுடன் திரிஜடை சிறைக் காவல் புரியும் அரக்கியரை நோக்கித் தான் கண்ட கனவைச் சொல்லுகிறாள் என்கிறது வால்மீகம்.

இக் கனவு இருபத்தேழாவது ஸர்க்கத்தில் விவரிக்கப் படுகிறது. ராமன் வெண்ணிறப் பூமாலையும், வெண் பட்டாடையும் அணிந்தவனாய், ஆயிரம் அன்னங்கள் தாங்கிய தந்தப் பல்லக்கிலே தம்பி லட்சுமணனோடு உல்லாஸமாக ஆகாச மார்க்கத்திலே வருவதாய்க் கனவு ஆரம்பமாகிறது.

இரண்டு கனாச் சித்திரங்கள்

சீதையும் வெண்ணிற ஆடை உடுத்தவளாய், சூரியனோடு ஒளிபோல் ராமனோடு சுகமாயிருப்பவளாய்க் காணப்படுகிறாள். எவ்வளவு வசீகரமான கனாத் தொடக்கம் பாருங்கள்!

கம்பனிலோ, கழுதை பேய் பூண்ட தேரின் மேல் இரத்த ஆடையனாய்ப் பத்துத் தலைகளிலும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு ராவணன் தென்திசை நோக்கிச் செல்லும் பயங்கரமான காட்சியே கனாத் தொடக்கமாக அமைகிறது. இது வால்மீகத்தில் கனவினிடையே வருகிறது.

தந்தப் பல்லக்கு விரைவில் நான்கு கொம்புகளோடு கூடிய மலை போன்ற யானையாகி விடுகிறது. (கனவு லோகத்திற்கு இசைந்த மாறுதல் தான்.) அந்த யானைமேல் ராம லட்சுமணர் ஒளி மேனியராக வந்து சீதையைக் காண்கிறார்கள். வான வீதியிலிருந்த அந்த யானைமேல் சீதையும் ஏறி உட்கார்ந்து கொள்கிறாள்.

பிறகு சீதை கணவரின் மடியிலிருந்து துள்ளி உயர எழும்பிச் சந்திர சூரியர்களைக் கையால் தடவுகிறாள். (கனவில் நடக்கக் கூடிய காரியம்தான்.) அப்பால் யானை சீதா ராம லட்சுமணர்களுடன் லங்கைக்கு நேராக வந்து நிற்கிறது.

திடீரென்று யானை தேராக மாறுகிறது — வெண்ணிறக் காளைகள் பூட்டிய ரதமாக. இப்படியெல்லாம் கனாத் தோற்றங்களையும் ஒருவகை உண்மை மெருகு கொடுத்துக் காட்டிக் கொண்டே போகிறார், இயற்கை வருணனைக் கவிஞரான ஆதிகவி.

சீதாராமபட்டாபிஷேகமும் திரிஜடை கனவிலே தோன்றிவிடுகிறது: ராமன்

அதியற்புதமான ஆசனத்தில் கிழக்கு முகமாக வீற்றிருக்கிறான். முனிவர்கள் புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகம் செய்கிறார்கள். சீதை தூய மலர்களாலும் வாசனைத்திரவியங்களாலும் தன்னை அழகு செய்துகொண்டு திகழ்கிறாள். ராமனை மகாவிஷ்ணுவாகவும் அந்தத் திவ்யாசனத்திலே திரிஜடை காண்கிறாள்.

பட்டாபிஷேக சமயத்தில் முழங்கிய ஆடல் பாடல்களையும் கனுக்காணும் பேறு பெறுகின்றாள் திரிஜடை. புல்லாங்குழல்களும் வீணைகளும் முரசுகளும் சங்குகளும் இவள் செவிகளில் மங்களமாகக் கோஷிக்கின்றன.

புஷ்பக விமானத்தின் மீது ராமன் சீதையுடனும் லட்சுமணனுடனும் ஏறிக்கொண்டு வடக்குத் திக்கை நோக்கிச் செல்வது கூடத் திரிஜடை சொப்பனத்திலே முன்கூட்டி நிகழ்ந்து விடுகிறது.

இதற்குப் பின், ராவணன் மொட்டைத் தலையில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு சிவந்த ஆடை தரித்தவனாய்க் காணப்படுகிறான். அவன் புஷ்பக விமானத்திலிருந்து பூமியில் விழுவதையும், கழுதை பூட்டிய ரதத்தில் ஏறித் தெற்கு நோக்கிப் போய், ஒரு சேற்று மடுவில் மூழ்கிப் போவதையும் திரிஜடை கனுக் காண்கிறாள். கழுதை மீதேறி விரைந்து போவதையும், அந்த வாகனத்திலிருந்து தலை கீழாகப் பூமியில் விழுவதையும் காண்கிறாள்.

இவ்வாறே கும்பகர்ணனையும் காண்கிறாள்; ராவணனுடைய பிள்ளைகளையும் காண்கிறாள். பன்றி மீது ராவணனும், முதலை மீது இந்திரஜித்தும், ஒட்டகை மீது கும்பகர்ணனும் தெற்குத் திக்கை நோக்கிப் போவதையும் காண்கிறாள் திரிஜடை. அரக்கர் கூட்டம் சிவந்த ஆடைகளுடனும் சிவந்த மலர்களுடனும் காணப்படுகிறது. இவற்றைக் கம்பன் சுருக்கமாக,

மக்களும் சுற்றமும்
மற்று ளோர்களும்
புக்கனர் அப்புலம்;
போந்த திலையால்

என்று மிகவும் சுருக்கமாகச் சொல்லி விடுகிறான்.

வால்மீகத்தில், விபீஷணன் ஒருவன் மாத்திரம் வெள்ளைக் குடையும் வெள்ளை மாலையும் வெள்ளையாடையும் வெள்ளைச் சந்தனமும் அணிந்தவனாய் நான்கு கொம்புகளையுடைய யானை மீது ஏறிக்கொண்டு ராமனை அடைகிறான். கனவின் இப்பகுதி, விபீஷணன் அடைக்கலம் அடைவதையும் முடிசூட்டப் பெறுவதையும் குறிப்பிடுகிறதல்லவா?

கம்பனுடைய திரிஜடையோ, தன் தந்தையாகிய விபீஷணனைக் கனவில் காணவே யில்லை. ராஜ்யலட்சுமி விபீஷணனுடைய அரண்மனைக்குச் சென்றதை மட்டுமே காண்கிறாள்:

சேயொளி விளக்கமொன்(று)
ஏந்திச் செய்யவள்,
நாயகன் திருமனை
நின்று, நன்னுதல்
மேயினள் விடணன்
கோயில்.

வால்மீகியின் திரிஜடை, லங்காபுரி கோபுரங்களுடனும் தோரண வாசல்களுடனும் இடிந்து கடலில் விழுவதாகவும் கனுக் காண்கிறாள், ராமதூதனை குரங்கு ஒன்று லங்கையை எரிப்பதாகவும் கண்டு கொள்கிறாள். கம்பனோ துர்நிமித்தங்களான உற்பாதங்களை மட்டும் திரிஜடை கனவில் குறிப்பிடுகிறான்.

வால்மீகத்திலே திரிஜடை தன் கனவைக் கூறி முடிக்கும் போது, ராவணன் முதலானவர்களை ராமன் அழித்து விடுவதும், சீதையை அடைவதும் திண்ணம் என்கிறாள். தன் அன்பிற்கு உரியவளாய்ப் புகழத் தக்க மதிப்புடன் வனத்திற்கும் கூடவே வந்த மனைவி மிரட்டப்பட்டதையும், பயமுறுத்தப்பட்டதையும் ராமன் பொறுத்திருக்க மாட்டான் என்கிறாள். எனவே 'நீங்கள் கண்ணுக்குத் தெரியாதபடி ஓடி ஒளித்துக் கொள்ளுங்கள்' என்று அரக்கியரை எச்சரிக்கை செய்கிறாள்.

சீதை துக்கங்களிலிருந்து விடுதலை பெறுவது நிச்சய மென்றும், நல்ல

வார்த்தை சொல்விச் சீதையைப் பணிந்தால் இவள் ஆபத்திலிருந்து காப்பாற்றுவ ளென்றும் திரிஜடை கூறுகிறாள். கடைசியாகச் சீதைக்கு ஏற்பட்டிருக்கும் நன் னிமித்தத்தையும் பிரஸ் தாபிக்கிறாள்.



கம்பன் காட்டும் கலைச் சிகரம்

கம்பன் கூறும் திரிஜடை கனவின் உயிர் நிலைப் பகுதி வால்மீகி யில் காணப்படவில்லை. அதாவது, இரண்டு சிங் கங்கள் புலிக் குட்டிக ளுடன் மதயானைக் காட்டை உலைத்துத் தாக் குவதும், மயில் வெளிப் படுவதுமாகிய கற்பனை.

இக் கற்பனையின் சிகர மாகக் காண்கிறோம், ஆயிரம் திரி விளக் குகள் மாட்டிய பெரிய திரு விளக் குடன் புறப்படும் ராஜ்ய லட்சுமியை. ஆம், இவள் ராவ ணன் திருமனை விட்டு விபீஷ ணன் பொன்மனை புகுந்த கனாக் கதை, உலக மகா கவிகளுக்குத் தோன்றும் பகற் கனவில் தானா கவே கம்பன் கண்டுகொண்ட கற்பனைச் சிகரம் இது.

இலக்கிய உலகிலே இப்படியும் ஒரு கனாவைக் கண்டு காட்ட முடியுமா எனத் தோன்றுகிறது, கனவு முடிந்ததில்லையே என்று திரிஜடையைத் தவிக்க விட் டிருக்கும் கவியைப் பார்க்கும்போது.

திரிஜடை தவிக்கிறதும், சீதை பரி தவிக்கிறதும் இக்கனாக் கற்பனையின் சிகர ஜோதி.

'அன்னையே! அதன்குறை
காண்'என்(று) ஆயிழை,
'இன்னமும் துயில்க'என
இருகை கூப்பினாள்.

என்பது ரஸிகர் உள்ளத்திலே 'ஆயிரம் திரு விளக்கு அமைய மாட்டிய சேயொளி விளக்க'மாக ஜொலிக்கும் ஜோதியான கவிதை.

வேறு மாறுதல்கள்

வால்மீகத்தில் திரிஜடை கனவிற்குப் பின் பிரஸ்தாபிக்கப்படுகிறதே சீதைக்கு ஏற்பட்ட நன்னிமித்தம், அதைக் கம்பன் கனவுக்கு முன்பே சீதை கூற்றாகக் குறிப்பிட்டு விடுகிறான். வால்மீகத்திலோ இது திரிஜடையின் கூற்று.

'தாமரைப் பூவின் அகன்ற இதழ் போன்ற (சீதையின்) இடது கண் துடிக்கக் காண்கிறேன். இவளுடைய இடது புஜமும் திடீரென்று துடிக்கிறது' என்கிறாள் திரிஜடை.

மேலும் ஒரு மரக் கிளையில் வசிக்கும் பறவை உள்ளம் பொங்கச் சுகமாய்க் கூவுவதைச் சுட்டிக் காட்டி, அது சிறந்த உறவினரின் வருகையைக் குறிப்பிடுகிறது என்கிறாள். கம்பன் இதைக் குறிப்பிடவில்லை.

மின்னிற மருங்குலாய்!
  செவியின் மெல்லெனப்
பொன்னிறத் தும்பிவந்(து)
  ஊதிப் போயதால்

என்று ஒரு பொன் வண்டு சீதை செவிப் பக்கத்தில் ஊதிச் சென்றதைத்தான் திரிஜடை குறிப்பிடுகிறாள். கம்பன் செய்துள்ள இம் மாறுதலும் கலைச் சுவையை அதிகரிக்கிறது என்பது வெளிப்படை.

திரிஜடை கனவைக் கூறி முடித்துச் சீதை விஷயமாக நன்னிமித்தங்களும் கண்டு காட்டியதுடன், வால்மீகத்தில் இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றுப் பெறுகிறது. அடுத்த ஸர்க்கத்திலே சீதையின் தற்கொலை முயற்சி பிரஸ்தாபிக்கப் படுகிறது.

திரிஜடை கனவு சீதைக்கு ஆறுதல் அளித்ததாகக் காணப்படவில்லை. ராவணன் வந்து சம்பாஷித்துப் போனதையும், அரக்கியர்கள் பயமுறுத்தியதையும் நினைத்துக் கொண்டே தற்கொலை செய்து கொள்ள விரும்புகிறாள் சீதை.

கம்ப ராமாயணத்திலும் திரிஜடை கனவினால் சீதையுள்ளம் ஆறுதல் பெறவில்லை தான். அதற்குச் சற்றும் அவகாசம் இல்லாமல் செய்து விடுகிறது, அரக்கியர் விழித்தெழுந்து ஆயுதபாணிகளாகித் திரண்டு சூழ்ந்து கொள்ளும் பயங்கரக் காட்சி.

ஆனால் இதே சமயத்தில் அனுமன் சீதையின் இருப்பிடத்தை (சீதையை அல்ல) நோக்குகிறான், ஒரு மரக் கிளையில் மறைந்திருந்தபடியே.

வால்மீகத்திலோ அனுமன் சீதையையே இதற்கு முன்பு பார்த்து விடுகிறான். சீதையைக் கண்ட பின்பு அனுமன் சிறைக் காவல் செய்யும் அரக்கியர்களையும் உற்று நோக்கி விடுகிறான்.

தெளிவான சந்திரிகையில் சீதையின் அழகைப் பார்த்தது போல் கோர பயங்கரங்களாகிய ராட்சஸ சொரூபங்களையும் அனுமன் பார்க்கிறான்.

வால்மீகியைப் பின்பற்றியே கம்பனும், அரக்கிமார்களின் தோற்றத்தை வருணிக்கத் தொடங்குகிறான்:

வயிற்றிடை வாயினர்;
  வளைந்த நெற்றியில்
குயிற்றிய விழியினர்;
  கொடிய நோக்கினர்;
எயிற்றினுக்(கு) இடையிடை
  யானை, யாளி, பேய்
துயில்கொள்வெம் பிலன்எனத்
  தொட்ட வாயினர்!

[குயிற்றிய — அமைக்கப்பட்ட. எயிற்றினுக்கு — பற்களுக்கு. வெம்பிலன் — கொடிய மலைக்குகை. தொட்ட — ஆழமாகத் தோண்டி வைத்தது போன்ற.]

இந்தப் பயங்கரிகளையும் பயமுறுத்துகிறது வால்மீகியில் திரிஜடை கனவு, கம்பனிலோ திரிஜடை கனவு அரக்கியர் காதில் விழவே யில்லை.

சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ

426. சித்திரமும் விசித்திரங்களும்

அரக்கிமார்களில் சிலருக்கு வயிற்றிலேயே, வாய் அமைந்திருக்கிறதாம், கபந்தனைப் போலே. ஏற்கெனவே நமக்கு அறிமுகம் தானே அந்த முகமில்லாத, வயிற்றிலே வாய் படைத்த அரக்கன்?—'எவ்வுயிரும் கையின் வளைத்து வயிற்றடக்கும் கவந்தன்' தான்.

'வயிற்றிடை வாயினர்'

வயிற்றிலே வாய்—எவ்வளவு சௌகரியமான ஏற்பாடு! வாய்—வாசல். இந்த வாசல் வயிற்றுக்குத்தானே? இவ் வாசல் வழியாக உணவுகளெல்லாம் வந்து சேர வேண்டியது வயிற்றில் தானே? வயிற்றின் வாசல் வயிற்றிலேயே அமைந்திருப்பது பொருத்தம் தானே? அப்படியே கையால் வளைத்து வயிற்றுக்குள்ளே அடைத்துக் கொள்வது வெகு சுலபமல்லவா?

வாய் வயிற்றைவிட்டு விலகித் தூரத்திலே, நெஞ்சிற்கும் கழுத்திற்கும் மேலே போய் அமர்ந்திருப்பதால்] வயிற்றுப் பெருமானுக்குத் தான் எவ்வளவு அசௌகரியம் பாருங்கள்! மேலும், வாய் மேலே இருப்பதால் அதற்கு ஒரு மேல் மாடமாகத் தலை அமைந்திருக்கிறது: தலைக்குள்ளே மூளை குடிபுகுந்து, நன்மையென்றும் தீமையென்றும் தர்மமென்றும் அதர்ம மென்றும் பிரித்து, இல்லாத, பொல்லாத சேட்டைகளெல்லாம் செய்து கொண்டிருக்கிறது!

கபந்தேச்வரனைப் போலத் தர்மாதர்ம விவேக விசாரங்கள் இல்லாமல் வயிற்றுப் பெருமானை வழிபடுவதும், அதற்காகவே ராவணேச்வரனுக்கு அடிமை செய்வதுமாயிருக்கிறார்கள், இந்த 'வயிற்றிடை வாயினர்.'

விகட வேஷக்காரிகள்

அதோ பாருங்கள் 'வளைந்த நெற்றியில் குயிற்றிய விழியினர், கொடிய நோக்கினர்.' நெற்றி நடுவிலே இயற்கை இட்ட பொட்டுப் போலே ஒரு வட்டக் கண்! அந்தக் கண்ணிலே தான் எப்படி ஜொலிக்கிறது கொடுமை!

மாமிச பருவதங்களிலே இயற்கை தோண்டி வைத்த பிலத் துவாரம் போன்ற வாய்கள்; 'வெம் பிலன் எனத் தொட்ட வாயினர்' சிலர்!

சிலர் ஒற்றைத் தலையும் பத்துக் கைகளுமாய்க் காட்சி யளிக்கின்றனர். வேறு சில அரக்கியருக்கோ இருபது தலைகளும் இரண்டு கைகளும்! ஜலதோஷம் பிடித்தால், ஐயோ ஒரே சங்கடம்!

ஒருபது கையினர்,
ஒற்றைச் சென்னியர் ;
இருபது தலையினர்
இரண்டு கையினர் ;
வெருவரு தோற்றத்தர்,
விகட வேடத்தர் !

[ஒருபது — பத்து. சென்னி — தலை. வெருவரு — நடுங்குவதற்குக் காரண மான.]

இந்த விகட வேஷக்காரிகளின் கைகள் தொட்டில் ஆட்டிய கைகளா, சமையல் செய்த கைகளா? இல்லத்திலே செங்கோல் இனிது நடத்திய கைகளா? இல்லை, இல்லை :

சூலம்,வாள், சக்கரம்.
தோட்டி, தோமரம்,
காலவேல், கப்பணம்
கற்ற கையினர் ;
ஆலமே உருவுகொண்-
டனைய மேனியர் ;
பாலமே தரித்தவன்
வெருவும் பான்மையார்

[தோட்டி — அங்குசம். தோமரம் — இருப்புலக்கை அல்லது பெரிய ஈட்டி. கால வேல் — காலனைப் போன்ற பயங்கரமான பெருவேல். கப்பணம் — கைவேல். கற்ற — பயிற்சி பெற்ற. ஆலம் — விஷம். உருவு கொண்டனைய — உருவம் கொண்டாற் போன்ற. பாலம் — பால் போல் வெண்ணிறமுள்ள கங்கா ஜலம். பாலமே தரித்தவன் — ருத்திர மூர்த்தி. வெருவும் — அஞ்சும்படியான.]

சட்டி, சட்டுவம் பிடித்த கைகள் அல்லவே !— சண்ட வேகத்தில் கொலைக் கருவிகளைப் பிடித்து வீசும் சண்டைக்காரிகளல்லவா? ருத்திர மூர்த்தியும் அஞ்சக்கூடிய சண்டிகள் !

குணத்திற்கு இசைந்த கோர சித்திரங்கள்

அந்த முகங்களில் தான் எத்தனை தினுசுகள் :

கரி,பரி, வேங்கைமாக்
கரடி, யாளி,பேய்,
அரி,நரி, நாய்என
அணிமு கத்தினர் !

[கரி—யானை, பரி—குதிரை. வேங்கைமா — புலி. யாளி — சிங்கம் போல்வதும், யானையைக் கொல்வதும், யானை போல் துதிக்கை யுள்ளதுமாகிய ஒரு மிருகம் என்பர். அரி—சிங்கம். அணி முகத்தினர்—இம்மிருகங்களின் முகங்களையே தங்களுக்கு இசைந்த முகங்களாக அணிந்து கொண்டவர்கள்.]

யானை முகக் கடவுள் போல் யானை முகம் படைத்தவராம் சில அரக்கியர். வேறு சிலரோ சிறப்பாகக் குதிரை முகம் படைத்தவர்கள். சுபாவத்திலோ மத யானைகள், பந்தயக் குதிரைகள் !

சிலருக்குப் புலி முகம் — இரத்த வெறிக்கு இசைந்தமைந்த முகம்தான். கரடியின் கொடுமையுள்ள வேறு சிலருக்குக் கரடி முகம். இன்னும் சிலருக்கு யாளி முகம், சிங்க முகம்.

பலர் தங்கள் பண்புகளுக்கும் தந்திர சாமர்த்தியங்களுக்கும் பொருத்தமாக நாய் முகத்தோடும் நரி முகத்தோடும் காட்சி தருகிறார்கள். அதோ சிலர் பேய் முகத்தோடு பயமுறுத்துகிறார்கள்!

பேய்த் தன்மையும் மிருக சுபாவங்களும் கோரமா தவம் புரிந்து தங்களுக்கு இசைந்த திருமுகங்களை அருமையாகப் பெற்றுப் பெருமையாகப் போற்றி வருகின்றன. (இந்தக் காலத்திலும் இப்படியெல்லாம் இருக்க முடியுமானால், எவ்வளவு லேசாக ஆசாமிகளை இனங் கண்டு கொள்ளலாம் !)

இப்படியெல்லாம் குணங்கள் அணிந்து கொண்ட அணிகளாகிய முகங்களில் சில, முன் பக்கத்தில் கொலுவிருக்கக் கூசியனபோல், முதுகுப் பக்கத்தில் போய் அமைந்திருக்கின்றனவாம். சில அரக்கிமார் ஸாக்ஷாத் பரமேச்வரனைப் போல் திரிநேத்திரதாரிகளாக இருந்து ராவணேச்வரனுக்குப் பணி செய்யும் பேறு பெற்றிருக்கிறார்களாம்.

சிலருக்கு வாய் புகைந்து கொண்டேயிருக்கிறதாம். (சுருட்டுப் புகையல்ல, உள்ளத்திலே மூட்டிக் கொண்டிருக்கும்



கோபத்தீக்கும் கொடுமைத் தீக்கும் அறிகுறிதான்.)

இந்த வர்ணனைகள் பெரும்பாலும் வால்மீகத்திலிருந்து தொகுத்து மெருகு பூசப் பெற்றவையே. 'பன்றி மான் புலி எருமை ஆடு குள்ளநரி போன்ற முகமுள்ளவர்களை வால்மீகியும் சுட்டிக் காட்டுகிறார். சூலம் கலப்பை சம்மட்டி தரித்தவர்களையும் காட்டுகிறார். விகார வேடத்தவர்களையும் அறிமுகப் படுத்துகிறார். கொடிய பார்வையுள்ளவர்களையும் 'பார் பார்' என்று காட்டுகிறார்.

'பொருந்த நோக்கினான்'

அனுமன் முதலில் சீதையைப் பார்த்துவிட்டு அரக்கியரையும் பார்ப்பதாக வால்மீகி கூறுகிறார். அந்த அரக்கியருக்கிடையே ஒளி குன்றிச் சோகத்தால் வாடியிருக்கும் சீதையை மறுபடியும் ஊன்றி நோக்குகிறானாம் அனுமன்.

கம்பனோ, கண்ணுக்கும் எண்ணுக்கும் அடங்காத தோற்றமுள்ள அரக்கியர் திடீரென்று துயிலுணர்ந்து எழுந்து சீதையைச் சூழ்ந்து கொள்வதாக வருணிக்கிறான் :

எண்ணினுக்(கு) அளவிடல்
அரிய ஈட்டினர்,
கண்ணினுக்(கு) அளவிடல்
அரிய காட்சியர்,

பெண்ணெனப் பெயர்கொடு
திரியும் பெற்றியர்,
துண்ணெனத் துயிலுணர்ந்(து)
எழுந்து சுற்றினர்.

[அளவிடல் அரிய — அளவிட அருமை யான. ஈட்டினர்—கூட்டத்தார். கொடு — கொண்டு. பெற்றி — தன்மை. துண் என — திடுக்கென்று.]

தாய்க்குலமாகிய பெண்குலமா இந்தக் கோர சொரூபங்களும், இந்தப் பயங்கர விகடங்களும்? ஐயோ!

பெண்ணெனப் பெயர்கொடு
திரியும் பெற்றியர்!

என்ற கவிஞன் கூற்றிலேயே பெண்மை யின் பெருமையை எண்ணி இரங்கும் பொன்னுள்ளம் புலனாகிறதல்லவா?

சூலம் வாள் வேல் இருப்புலக்கை முதலான ஆயுதங்களுடன் இந்த அரக்கி யர் சுற்றிக் கொண்டதும், சீதையும் திரி ஜடையும் தங்கள் பேச்சை நிறுத்திக் கொள்கிறார்கள். அந்தக் கொடிய முகங் களைப் பார்த்துச் சீதை முகம் வாடி ஒடுங்கிப் போகிறது.

இதே சமயம் அனுமன் ஓங்கி வளர்ந் திருந்த ஒரு மரக் கிளையில் தொத்தி மறைவாயிருந்து பார்க்கிறான்:

ஆயிடை உரைஅழிந்(து)
அழகன் தேவியும்,
தீஅனை யவர்முகம்
நோக்கித் தேம்பினாள்;
நாயகன் தூதனும்
விரைவில் நண்ணினான்,
ஓய்விலன், உயர்மரப்
பணையின் உம்பரான்.

[ஆயிடை - அப்பொழுது. உரை அழிந்து - பேச்சு ஒடுங்கி. தீ அனையவர் - தீயைப் போன்ற அரக்கிமார். தேம்பி னாள் - வாடினாள். நண்ணினான் - அந்த இடத்திற்குச் சமீபமாக வந்து சேர்ந்து. ஓய்விலன் - சோர்வு இல்லாதவனாய்; சுறுசுறுப்புள்ளவனாய். உயர் மரப் பணை யின் உம்பரான் - ஓங்கி உயர்ந்து வளர்ந் திருந்த ஒரு மரத்தின் கிளைமீது ஏறி யிருந்தான்.]

பின்னிப் பிணைந்திருந்த அந்த மரச் சோலையிலே யாரும் அறியாதபடியே அனுமன் கிளைக்குக் கிளை தாவிச் சீதையிருக்கும் இடத்திற் கருகே வந்து, ஓங்கிய மரக்கிளையொன்றில் அமர்ந்து கூர்ந்து நோக்குகிறான், சீதாதேவி நடுங்கி ஒடுங்கிப் போயிருக்கும் இந்த வேளையிலே.

'திடீரென்று இத்தனை அரக்கிமார் இங்கே ஆயுதபாணிகளாகிக் கூட்டமா யிருப்பதற்குக் காரணம் என்னவோ?' என்று சிந்தித்த வண்ணம் அந்த இடத்தை விரைவாக உற்றுப் பார்க் கிறான்.

ஒரு மின்னல்—சித்திரம்

பார்த்ததும் காட்சி யளிக்கிறாளாம் சீதா பிராட்டி:

விரிமழைக் குலம்கிழித்(து)
ஒளிரும் மின்னெனக்
கருநிறத்(து) அரக்கியர்
குழுவில் கண்டனன்,
குருநிறத்(து) ஒருதனிக்
கொண்ட லாமெனத்
திருவுருப் பொலியும் ஓர்
செல்வன் தேவியை!

[விரி மழைக்குலம் - விரிந்து பரவுகிற கருமேகக் கூட்டம். குழு - கூட்டம். குருநிறத்து - சிலாக்கியமான நிறத்தை யுடைய. ஒரு தனிக் கொண்டல்-தனக்கு ஒப்பேயில்லாத நீலமேகம்.]

இதயம் முழுவதும் இடம் கொண்ட திருவுருவத்தைச் சற்று ஏறக்குறையப் பாதிச் செய்யுள் முழுவதும் வருணித்து விட்டுச் 'செல்வன் தேவியை' என முடிப்பதைப் பாருங்கள்.

செல்வனுடைய தேவியை இனிமேல் தான் இந்தச் செல்வனுக்கும் மேலாக மதிக்கப் போகிறது அனுமனுள்ளம். இப்போதோ கோர விசித்திரங்களுக் கிடையே ஒப்பற்ற ரூப சித்திரமாக, கருமேகக் காட்டகத்தே ஒரு மின்னல்-ராணியாகக் காண்கின்றன கண்கள்.

மின்னல் - சித்திரம்: இதை என்றும் ஒளி குன்றாது பாதுகாக்க மின்னல் - கவிதை.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

427. தருமம் சாகவில்லை!

விண்ணிலிருந்து நழுவி விழுந்த நட்சத்திரம் போலக் காணப்பட்டாள் சீதாதேவி அரக்கியருக் கிடையே, அனுமன் கண்களில் என்கிறார்—ஆதி கவி.

கார்காலம் போனபின் சரத்கால மேகங்களால் சூழப்பட்ட சந்திர கலை போல் சீதை காணப்பட்டதாகவும் வால்மீகி கூறுகிறார்.

கம்பனுடைய அனுமனோ, தீவினைக்கு அறிகுறியான 'கருநிறத்து அரக்கியர் குழுவில்'

> விரிமழைக் குலங்கிழித்(து)
> ஒளிரும் மின்னென,

சீதாபிராட்டியைக் காண்கிறான்.

செல்லரித்தது செல்லுமா?

அரக்கியரிடையே முதல் முதல் அனுமன் சீதையைக் காணும் இந்தக் கவிதையும், சரத்கால மேகங்களில் மறைந்த சந்திர கலை போல் கொஞ்சம் தெளிவாகவும் கொஞ்சம் தெளிவில்லாமலும் சிதைந்து கிடந்து, அண்மையில் தான் தன் பழைய பூர்ண ஒளியுருவம் தோன்ற வெளிப்பட்டிருக்கிறது.

சிதைந்த கவியுருவம் இது:

> விரிமழைக் குலங்கிழித்(து)
> ஒளிரும் மின்னெனக்
> கருநிறத் தரக்கியர்
> குழுவிற் கண்டனன்,
> உருநிறத்(து) ஒருதனிக்
> கொண்டல் ஊழியான்
> இருநிறந்(து) உற்றளற்(கு)
> இயைந்த காந்தத்தை.

பாட்டின் முற்பகுதி எவ்வளவு தெளிவாகவும் இனிமையாகவும் இருக்கிறதோ, அவ்வளவு மயக்கமாகவும் கரடு முரடாகவும் இருக்கிறதல்லவா பிற்பகுதி? இப்பிற்பகுதிக்கும் சிரமப்பட்டுப் பொருள் காட்டத் தமிழிலக்கணம் இடங்கொடுக்கத் தான் செய்கிறது.

'உருநிறத்து ஒரு தனிக் கொண்டல்' என்பதற்கு 'உருவத்தின் நிறத்தினால் ஒப்பற்ற நீலமேகம் போன்றவன்' என்று பொருள் சொல்வதில் சிரமமில்லை தான். ஊழியான்' என்பதற்கு 'ஊழிக் காலத்திலும் அழியாதிருப்பவன்; அதாவது கடவுளாகிய மகாவிஷ்ணு' என்று பொருள் கொள்வதும் பொருத்தம் தான்.

போகட்டும்; கடைசி வரியைப் பாருங்கள்:

> இருநிறந்து உற்றளற்(கு)
> இயைந்த காந்தத்தை.

என் இந்தப் பல்லுடைக்கும் வல்லோசை? கற்பாறையிலே மாட்டு வண்டி ஓடுவது போன்ற இந்த நடை எதற்காக இந்தச் சந்தர்ப்பத்திலே? யுத்த வருணனை, கோப சாப வருணனை ஒன்றும் இல்லையே?

புலமைத்திறம் பொருள் சொல்லுகிறது: 'பகவானுடைய பரந்த மார்பில் பொருந்தி என் பக்திக்கு ஏற்றவளாய் என் உள்ளங் கவரும் பிராட்டியை' என்று.

பக்தியும் பரவசமாகிறது, 'ஒரு கோடிப் பொழுதும் திருமாலின் திரு மார்பை விட்டுத் திருவாகிய மகாலட்சுமி பிரிவதில்லையே; அந்தத் திருமாமகளின் திரு அவதாரம் தானே சீதாபிராட்டி' யென்றெல்லாம். ஆம்; ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திற்குப் பொருத்தமாகவும் பொருள் சொல்லத்தான் செய்கிறார்கள் புலவர்கள்.

ஆனால் இந்தக் கடைசி அடியை முழுப் பாட்டுடன் சேர்த்து ஓதி ஓதிப் பார்க்கும் போது, ரஸிகர்களின் செவி என்ன பாடு படுகிறது!

கடைசி அடியிலும், 'ஏற்கு இயைந்த காந்தத்தை' என்ற அந்த முடிவைத் தான் பாருங்கள். 'எனக்கு இசைந்த காந்தத்தை' என்பது பொருள். இப்படிக் கவிஞன் சீதா பிராட்டியைக் குறிப்பிட்டிருக்க முடியுமா?

எனினும், இந்தச் சொற்றொடரால் கவிஞன் பிராட்டியிடம் கொண்டிருக்கும் பக்தி - அதிசயம் விளங்குகிறதாம். அதிசயமான பக்திதான், ரஸிகத் தன்மைதான்!

உண்மையில், பிற்பகுதி ஏட்டிலே செல்லரிக்கப்பட்டுப் பிற்கால இலக்கணப் புலவர் ஒருவரால் புதிய சிருஷ்டி (விசுவாமித்திர சிருஷ்டிதான்) பெற்றிருக்க வேண்டும்.

இதே பகுதிக்கு ஒரு பிரபல உரையாசிரியர்,

குருநிறந் தொருதனிக்
,கொண்ட லாமெனக்
கருநிறத்(து) அழகனுக்(கு)
அமைந்த காந்தையை

என்ற பாட பேதம் வெளியிட்டிருக்கிறார். இதிலும் கடைசி அடி செல்லரித்த ஓலையிலிருந்து பிறவி யெடுத்தது தான்!

ஏற்கெனவே கொடுத்திருக்கும் சரியான ஏட்டுப் பாடத்தைப் படித்ததும் பொருள் இனிது விளங்குகிறது. இந்தக் கவிதைக்கு உரிய ஓசை நயமும் உடனே புலனாகிறது—இல்லையா? இதுவே கம்பன் பாடம், உண்மை வாக்கு என்பது உறுதி.

இத்தகைய குறைபாடுகள் நீங்கி எல்லாருக்கும் பயன்படத் தக்க ஒரு கம்பராமாயண ஆராய்ச்சிப் பதிப்பு, இன்றியமையாத அரும்பதவுரை குறிப்புரைகளுடன் விரைவில் வெளிவர வேண்டுமென்றுதான் ரஸிகர்கள் விரும்புகிறார்கள், எதிர்பார்க்கிறார்கள்.





இயற்கைக் கவிஞர் காட்சி

இது நிற்க. வால்மீகத்திலே, சீதையை முதல் முதல் கண்டதும் அனுமனுக்கு ஏற்படும் மனநிலை விவரமாக வருணிக்கப்படுகிறது. 'இவள் தானா சீதை?' என்று முதல் முதல் சந்தேகப்பட்டான்.

பிறகு, 'இலக்கணப்படி அமையாத சொற்களின் பொருளை வருந்தி அறிவது போல்' ராமன் சொன்ன அடையாளங்களைக் கொண்டு ஆலோசித்து மிகவும் சிரமத்துடன் 'இவளே சீதை' என்று ஊகித்தான். எவ்வளவு பொருத்தமான உபமானம்!

இத்தகைய மனைவியைப் பிரிந்து ராமன் எப்படித்தான் பிழைத்திருக்கிறானோ என்று அதிசயப்பட்டான் அனுமன்.

இந்த நிலையில் சீதையைக் கண்ட மகிழ்ச்சி அனுமனுள்ளத்தில் விசேஷமாக இடம் பெற்றது. 'ராமன் மகா பாக்கியமுடையவன்' என்று அனுமன் தனக்குள் தானே புகழ்ந்து கொண்டான்.

இப்படிப் பதினைந்தாவது ஸர்க்கத்தை முடித்து விட்டு அடுத்த ஸர்க்கத்திலே சீதையின் பரிதாப நிலை கண்டு அனுமன் பரிதவிப்பதை வர்ணிக்கிறார் வால்மீகி.

முதல் முதல் சீதையைக் கண்ட மகிழ்ச்சியைக் குறிப்பிட்டுப் பிறகு சிந்தையில் மூழ்கி ஆலோசித்துக் கண்களில் நீர் ததும்பச் சீதைக்காக அனுமன் வருந்துவதாக விவரிப்பது, ஆதிகாவியத்தில் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது.

அரக்கியரிடையே சீதை, பனியால் பாழாக்கப்பட்ட தாமரை ஓடைபோல் அழகு குன்றியிருப்பதும், ஓடம் பாரத்தினால் தண்ணீரில் மூழ்குவது போல் துக்க பாரத்தால் மூழ்கியிருப்பதும், வால்மீகியின் உபமானத் திறனுக்கு மறுபடியும் சான்றாகி, அனுமனுடைய துக்கத்திற்கும் புலம்பலுக்கும் காரணமாகின்றன.

இயற்கையோ இவர்களுடன் 'ஸமதுக்கி'யாக இசைந்து கலந்து கொள்ளவில்லையாம்.

வஸந்த ருதுவாகையால் நுனிகள் தழைத்த அசோக விருட்சங்கள் புஷ்ப பாரத்துடன் விளங்குகின்றன. ஆம்பல் மலர்க் குவியல்போல் பிரகாசிக்கும் சந்திரன் நிர்மல ஆகாயத்திலே கறுத்த

ஜலப்பிரவாகத்தில் அன்னம் சஞ்சரிப்பது போல் வெகு தூரம் சென்று ஆகாயத்தின் பிற்பகுதியை அடைந்து, தன் குளிர்ந்த கிரணங்களைப் பொழிந்து கொண்டிருக்கிறான்.

இத்தகைய இயற்கை வருணனையும், சீதையின் சோகத்திற்கும் அனுமனது துக்கத்திற்கும் பகைப்புலமாகி, ரஸிக உணர்ச்சியைப் பெரிதும் தூண்டுகிறது.

அந்தச் சோலையிலுள்ள மரங்கள் புஷ்ப பாரத்தால் பூரித்திருக்கச் சீதையோ புஷ்பமில்லாத பூங்கொடி போல் சோபை குறைந்து புலப்படுகிறாள் அனுமனுக்கு.

அங்கேயுள்ள தாமரை யோடைகளில் தாமரை மலர்கள் குவிந்திருந்த போதிலும் பனியால் பாழாக்கப் படவில்லை. சீதை தான் சேறு படிந்த தாமரைத் தண்டு போலவும் காணப்படுகிறாள் அனுமன் கண்களுக்கு.

அங்குள்ள விருட்சங்களின் தளிர்களைத் தன் வெப்பமான மூச்சுக்காற்றினால் தகிப்பவள் போல் சீதை பெருமூச்சு விடுவதாகவும் தோன்றுகிறது அனுமனுக்கு.

முதல் முதல் மகிழ்ச்சி; பிறகு துக்கம்; மறுபடியும் துக்கக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராகுமாறு அகத்திலே பொங்குகின்ற மகிழ்ச்சி — இது வால்மீகியின் ஒப்பற்ற சித்திரம்.

சீதையை நன்றாகப் பார்க்க விரும்பிய அனுமன், சிம்சுபா விருட்சத்தில் மறைந்திருந்த வண்ணம் சீதையைக் காவல் செய்யும் பயங்கரமான தோற்றமுள்ள அரக்கியரையும் நன்றாகப் பார்த்து விடுகிறான். அவர்களுக்கிடையே சீதா தேவியைப் பார்த்து, இவளைக் காண நேர்ந்ததே என்று ஆனந்தம் கண்களில் பெருக ராமனையும் லட்சுமணனையும் நினைத்து வணக்கஞ் செலுத்துகிறான்.

அப்பால் சீதையைப் பார்க்க ராவணன் அசோக வனத்திற்கு வருகிறான் என்பது வால்மீகியின் கதை.

கம்ப சித்திரத்திலே

இவ்வளவு இயற்கையான அழகுப் பகுதியைக் கூடக் கம்பன் மொழி பெயர்த்துச் சேர்த்துக் கொள்ள வில்லை.

'மின் சேவிப்ப மின்னரசென்னும் படி நின்றாள்' என்றவாறு மின்னல்கள் சேவிக்க மின்னல் ராணியாக மிதிலையிலும் அயோத்தியிலும் விளங்கிய பெண்ணரசைக் 'கருநிறத்தரக்கியர் குழுவில்' கண்டுகொண்டதும், அனுமன் வாயிலிருந்து புறப்படும் முதல் வார்த்தை (தனக்குத் தானே சொல்லிக்கொள்ளும் வார்த்தை தான்): 'தர்மம் சாகவில்லை; நானும் சாகமாட்டேன் என்பது.

மகிழ்ச்சியையும் சோகத்தையும் கடந்த ஓர் அதித உணர்ச்சி நிலையில் இருக்கிறது அனுமனுள்ளம்.

'ஊர் தேடு படல'த்தின் இறுதியில்.

என்னியது முடிக்ககிலேன் ;
யான்முடியா திருப்பேனோ?

[முடிக்ககிலேன் — முடிக்க மாட்டாமல் போனேன்.]

என்று புலம்பினனல்லவா? இப்போது,

'விடின தன்(று)அறன்;
யானும் விகலேன்!
தேடினென்! கண்டனென்!
தேவி யே!'என,
ஆடினன்: பாடினன்:
ஆண்டும் ஈண்டும்பாய்ந்(து)
ஓடினன், உலாவினன்:
உவகைத் தேன்உண்டான்.

[என — என்று தெளிந்து. ஆண்டும் ஈண்டும் — அங்கும் இங்கும்.]

"நானும் செத்துப்போக மாட்டேன்!' என்ற இந்த ஆனந்த அனுபவத்திலேயே அனுமன் சிரஞ்சீவியாகி விடுவான் எனத் தோன்றுகிறது.

'இன்று போல் என்றும் இருப்பாய்!' என்று வாழ்த்தி வரங்கொடுக்கப் போகிறாளே சீதாபிராட்டி, அந்த வரப் பிரசாதத்திற்கு இந்த ஆனந்தம் ஒரு முற்குறி போல் ஆகிறது.



428. அலைமேல் மலை!

ஒரு கவி; ஹாஸ்யமாகவும் உல்லாஸமாகவும் கதை ஒன்றை உள்ளத்தில் கற்பித்துக் கொண்டிருந்தான். அந்தக் கதை ஓர் ஆனந்தப் பாட்டாக உருவாக வேண்டும் என்று ஆசை. இந்த ஆசை நிறைவேறி விட்டது நள்ளிரவிலே. என்ன குதூகலம், என்ன கூத்து! பக்கத்து அறையில் இருந்தவர்கள் கவிஞனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றே பயந்து போனார்கள்!

ஒரு விஞ்ஞானி; விஞ்ஞான உண்மை ஒன்றைத் தேடிக் கண்டு பிடிக்க விரும்பினான். நீராடிக் கொண்டிருக்கும் போதே அந்த உண்மை புலனாகி விட்டது. அப்படியே நீர்நிலையின் கரையில் ஓடினான்; உலாவினான். 'கண்டேன், கண்டேன்' என்று கூச்சலிட்டான், கூத்தாடினான்.

ஆனந்தக் களிப்பு

இந்த விஞ்ஞானியும் அந்தக் கவியும் அடைந்த உவகை வெறி, கம்பனுடைய அனுமனையும் ஆட்டி வைக்கிறது:

'தேடினென்! கண்டனென்
தேவி யே!' என்று,
ஆடினன்; பாடினன்;
ஆண்டும் ஈண்டும்பாய்ந்(து)
ஓடினன்; உலாவினன்;
உவகைத் தேன்உண்டான்!

இந்த அனுமன் மிகவும் நுட்பமான வடிவத்தில் இருந்ததனால் தான் அந்தக் கூத்தும் குதூகலமும் கீழே இருப்பவர்களுக்குத் தெரியவில்லை.

ஆனால் கம்பன் மிக மிக நுட்பமான காட்சி நலம் படைத்தவன்; செவிச் செல்வம் படைத்தவன். எனவே அனுமனை அந்த ஆனந்தம் படுத்திய பாடு இக்கவிஞனுக்கு அப்படியே புலனாகி விடுகிறது. அகத்தோடு அகம் தொட்டு அனுபவித்த ஆனந்தத்தை நமது அகத்திலும் பொங்க விடுகிறான்.

தன் அகத்திலே பொங்கிய ஆனந்த வெள்ளத்திற்கு அக்கரை இக்கரை தெரியவில்லை அனுமனுக்கு. கூத்தாடுகிறான், குதிக்கிறான்; மூழ்குகிறான், முழுகிப் போகிறான். மீண்டும் நிமிர்ந்து முகங் காட்டி நீச்சல் அடிக்கிறான். இத்தகைய ஆனந்தக் களிப்பை, இந்த ஆனந்த ஸாகரத்தைச் சொற் கொண்டு சித்திரிப்பது மகா கவிகளுக்கே இயலும்.

முதலாவது சிந்தனை அலை

சீதையைக் கண்ணுற்ற ஆனந்தம் முதல் முதல் பேச்சையும் நினைவையும்

கூடக் கடல் அலை பொங்கி மணல் வீடுகளை அழிப்பது போல் அழித்து விட்ட போதிலும், திடீரென்று ஒரு நினைவு தோன்றுகிறது, 'ஆஹா, அந்த ராமனுடைய உயிரை இங்கே யல்லவா ஒளித்து வைத்திருக்கிறான் இந்தக் கள்ளப் பயல்?' என்றெல்லாம்:

கள்ளவாள் அரக்கன், அக்
  கமலக் கண்ணனார்
உள்ளுறை உயிரினை
  ஒளித்து வைத்தவா!

[கமலக் கண்ணனார் - ராமன். வைத்தவா - வைத்த விதம் என்னே!]

ஆச்சரியமும் பரிவும் துயரமும் பொங்கி ஆனந்த அலையாகப் பரிணமிக்கும் அதிசயம் இது.

ராமனுடைய உயிரை இப்படி இங்கே ஒளித்து வைத்தவன் தன் உயிரை இழக்கத்தான் இப்படிச் செய்திருக்கிறான் என்பது குறிப்பு.

இரண்டாவது ஆனந்த அலை

மீண்டும் ஓர் அலை பொங்குகிறது, சீதையைக் கருத்தூன்றிக் கவனிக்கும் போது:

மாசுண்ட மணியனாள்,
  வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும்
  என்னத் தேய்ந்துளாள்,
காசுண்ட கூந்தலாள்,
  கற்பும் காதலும்
ஏசுண்ட தில்லையால்;
  அறத்துக்(கு) ஈறுண்டோ?

[மாசுண்ட - மாசு படிந்த. மணியனாள் - இரத்தினம் போன்றவள். வயங்கு - விளங்குகிற. வெங்கதிர்த் தேசு உண்ட - வெம்மையாகிய கிரணங்களையுடைய சூரியனது தேஜஸ் பட்ட. திங்கள் - சந்திரன். காசுண்ட - சிக்குப் பிடித்த. ஏசுண்டதில்லை - குற்றம் பொருந்தினதில்லை. ஈறு - அழிவு.]

மூன்றாவது அலை

ராமனுடைய வீர சௌந்தரியமும், ஜனக குல தியாக புத்தியும் மனக் கண் முன் தோன்றுகின்றன, இரண்டு சிகரங்களாக. இந்த இரண்டுக்கும் நடுநாயகமாகி இரு சிகரங்களையும் எடுத்துக் காட்டுவது போல் சீதாபிராட்டியின் மனமாட்சி ஓங்கி வளர்கின்றது. ஒரே தேஜஸாக ஓங்கி வளர்ந்து அந்த 'மாசுண்ட' மேனியை மறைத்து விடுகிறது!

அனுமன் தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான்:

புனைகழல் இராகவன்
  பொற்பு யத்தையோ,
வனிதையர் திலகத்தின்
  மனத்தின் மாண்பையோ,
வனைகழல் அரசரின்
  வண்மை மிக்கிடும்
சனகர்தம் குலத்தையோ,—
  யாதைச் சாற்றுகேன்?

[புனை கழல் — அணிந்த வீரக்கழலையுடைய. பொற் புயத்தையோ — அழகிய தோளையோ. வனிதையர் திலகத்தின் — பெண்களுக் கெல்லாம் திலகம் போன்ற பிராட்டியின். வனை கழல் அரசரின் — வீரக்கழலை யணிந்த அரசர்களுக்கு இருக்க வேண்டிய. வண்மை மிக்கிடும் — வண்மையை மிகுதியாகக் கொண்டுள்ள. சாற்றுகேன் — (இங்கே) புகழ்ந்து பேசுவேன்.]

நான்காவது பேரலை

இன்னும் ஒரு பேரலை வந்து அனுமனை மூழ்க்காட்டுகிறது:

தேவரும் பிழைத்திலர்,
  தெய்வ வேதியர்
எவரும் பிழைத்திலர்;
  அறமும் ஈறின்றால்:
யாவதிங்(கு) இனிச்செயல்
  அரிய(து) எம்பிராற்(கு)?-
ஆவஎன் அடிமையும்
  பிழைத்தின் றாமன்றே?

[பிழைத்திலர்—பிழை செய்தாரில்லை. தெய்வ வேதியர் எவரும் — மண்ணுலகில் தெய்வ வாழ்க்கை வாழும் முனிவர்கள் அனைவரும். ஈறு இன்று — அழிவுடையதன்று. எம்பிராற்கு — எம் தலைவனாகிய ராமனுக்கு. ஆவ என் அடி-



மையும் - ராமனுக்கு ஆவதாகிய என் அடிமைத் திறன் அல்லது கைங்கரிய நலமும். பிழைத்தின்று ஆம்-தவறுததாகும்.]

அனுமனுடைய தர்ம குதூகலம் தேவரைப்பாராட்டுகிறது; தெய்வ வேதியரைச் சீராட்டுகிறது; தரும தேவதைக்குப் பல்லாண்டு பாடுகிறது. இந்தச் சீதையின் தியாகமே ராமனுக்கும் வெற்றி யென்று ஜயகோஷம் செய்கிறது.

'அடியேனுடைய கைங்கரியமும் வெற்றி பெற்று விட்டது!' என்று ஜய மங்களமும் பாடிவிடுகிறது.

ஐந்தாவது அலை

விண்ணை வாழ்த்தி வீரனை வாழ்த்தித் தன்னுடைய கைங்கரிய பாக்கியத்தையும் வாழ்த்திக்கொள்ளும் அனுமன்,

வாழியர் உலகினி
வரம்பில் நாளெலாம்!

[வாழியர் - வாழக் கடவன. உலகு— உலகங்கள். வரம்பில் நாளெலாம் - வரம்பில்லாத கால மெல்லாம்.]

என்று, உலகெலாம் குறையின்றி வாழ வேண்டு மென்று மனமார வாழ்த்துகிறான்.

ஆறுவது அலை

சீதையின் மனமாட்சியை இமயப் பெருஞ்சிகரம் போலக் காண்கிறான் அனுமன், ஆனந்தக் கடலில் மிதந்து கொண்டே. 'இதுவன்றோ தவம்?— இப்படிப்பட்ட மனத் தவத்திற்கு முன், பஞ்சாக்கினி மத்தியில் முனிவர்கள் செய்கிற தவமும் ஒரு தவமா? அந்தக் கோரமா தவ மெல்லாம் இந்த மனத்தவத்திற்கு ஈடாகுமா?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்கிறான்.



துறவிகள் வாழ்க்கையை விட்டு ஓடிக் காடு புகுந்து கடுந்தவம் புரிவ தெல்லாம் இல்லறத்திலிருந்து நங்கையர் செய்யும் மனத் தவத்திற்கு ஒரு போதும் ஈடாகாது என்று கூறிச் சீதையின் மன மாட்சியைப் பெண்குலத்திற் கெல்லாம் பகிர்ந்து கொடுக்கிறான் :

நங்கையர் மனத்தவம்
நவிலற் பாலதோ?

[நவிலற்பாலதோ — சொல்லி முடியும் தன்மையுள்ளதோ.]

தருமத்தின் பெருமையெல்லாம் தரும பத்தினிகளின் பெருமைதான் என்று சித்தாந்தஞ் செய்கிறான். பொதுவாக நம் கவிகள் பெண்மையை இழிவு செய்து பாடுகிறார்கள் என்று குறை கூறுவோர் அனுமனுடைய இத்தகைய வாக்கை உற்றுநோக்கி உண்மை காணவேண்டும்:

தனிமையும் பெண்மையும்
தவமும் இன்னதே ;
வனிதையர்க் காகநல்
அறத்தின் மாண்பெலாம் !

[இன்னதே — இப்படிப்பட்டதே. வனிதையர் - பெண்கள்.]

நங்கையர் மனத்தவம் தான், மன மாட்சி தான், தருமத்தின் மாட்சியெல்லாம் என்ற சித்தாந்தத்திற்கு ஏக சாட்சியாகவும் சிகரமாகவும் சீதையைச் சுட்டிக் காட்டுகிறான் அனுமன்.

நவராத்திரி காலத்தில் திருமகளும் கலைமகளும் உமாதேவியும் தவங்கிடந்து ஒருருவமாகி அறியாமையை (மகிஷாசுரனை) வென்றதாகப் புராணம் சொல்லுகிறதல்லவா ? அவ்வண்ணமாகத் தனிமையும் பெண்மையும் தவமும் ஒருசேரத் தவங்கிடந்து ஒருருவாகிச் சீதை யென்று பெயர் பெற்றிருக்கின்றனவாம்.

இந்த மாட்சி பெண்குலத்திற்கும் தருமத்திற்கும் ஒருங்கே ஒரு பெருமாட்சியாகத் தோன்றுகிறது அனுமன் மனக் கண்ணிலே.

ஏழாவது அலை

கடைசியாக மலைபோல் வருகிறது ஓர் ஆனந்த அலை. அந்த ஆனந்த அதிசயத்திலே அனுமன், 'இந்தக் காட்சியை, இந்த மாட்சியைப் பார்க்கும் பாக்கியம் ராமனுக்குக் கூட இல்லை ; எனக்கே கிடைத்திருக்கிறது, — நானே தவம் செய்தேன் !' என்று கூடச் சொல்லத் துணிகிறான்.

மாணநோற்(று) ஈண்(டு)இவள்
இருந்தவா றெலாம்
காணநோற் றிலஅவன்
கமலக் கண்களே !

[மாண - மாட்சிமைப்பட. நோற்று - (தியாகமாகிய) நோன்பு அல்லது தவத்தைச் செய்து. இருந்த ஆறு - இருந்த விதம். காண நோற்றில - காணத் தவஞ்செய்தன அல்ல.]

இந்த உணர்ச்சி அனுமனுள்ளத்திலே எப்படி ஆழ்ந்து பதிந்து விட்டது என்பதற்கு இந்தச் சுந்தர காண்டத்தின் இறுதிப் படலமும் சான்றாகிறது.

ராமன் கண்களும் செய்யாத தவத்தைத் தன் கண்கள் செய்திருக்க வேண்டும் என்று இப்போது எண்ணத் துணிந்த அனுமன், சீதாதேவியின் சூடாமணியை ராமனிடம் கொடுக்கும்போது, 'தாமரைக் கண்கள் ஆர வித்தக ! காண்டி' என்று கொடுக்கிறானும்.

தியாக சௌந்தரிய சிகரத்திலிருக்கும் தேவியைக் காணும் பாக்கியத்தைப் பெறாவிட்டாலும் அந்தக் கமலக் கண்கள் தேவியின் அறிகுறியான சூடாமணியையாவது கண்டு களிக்க வேண்டும் என்று சொல்லாமல் சொல்லி விடுகிறான், தன்னை யறியாமலே.

ஆனந்தச் செருக்கு உள்ளத்திற்குள்ளே மறைந்து கிடந்து எத்தகைய சந்தர்ப்பத்தில் எப்படித் தன்னையும் அறியாமலே வெளிப்படுகிறது பாருங்கள் !

அலைமேல் அலை யெறியும் ஆனந்த சமுத்திரத்திலே ஒரு மலைபோல வரும் அலைதான் இந்த ஆனந்தச் செருக்கு !

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

429.

தோன்றினன் அரக்கன்

எண்ணங்கள் தோன்றிய வண்ணமா யிருக்கின்றன அலைமேல் அலையாக. அந்தச் சிந்தனை அலைகள் மீது மிதந்து கொண்டிருக்கிறானா அனுமன்? அல்லது, அந்த நெடு மரத்தின் கிளையில்தான் குந்தி யிருக்கிறானா?

ஏன் இந்த ஒளிவு?

சிறிய உருவில் தான் இருக்கிறான், வாலைச் சுற்றிக் கொண்டு கிளையோடு கிளையாக. சிந்தனைதான் விசுவரூபம் எடுத்து அதிசயமாகப் பறந்து படர்ந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய மரக் கிளையில் ஒரு புறம் தழைத்துச் செழித்து அடர்ந்து கிடக்கின்றன அழகிய பொன்மயமான தளிர்களும் இலைகளும். திடீரென்று அந்தப் பகுதியில் போய் மறைந்து நிற்கிறான் அனுமன். ஏன் இந்த ஒளிவுமறைவு?

சிந்தனைகளை ஓங்கிப் படரவிட்டுக் கொண்டிருக்கும் போதே, கண்கள் கீழே சீதையிருக்குமிடத்தைப் பார்த்துக் கொண்டு தானிருக்கின்றன. அதோ நாமும் பார்க்கிறோம்:

> என்றிவை இனையன
> எண்ணி வண்ணவான்
> பொன்திணி, நெடுமரப்
> பொதும்பர்ப் புக்(கு), அவண்
> நின்றனன்; அவ்வழி
> நிகழ்ந்த தென்னெனில்,
> துன்றுபூஞ் சோலைவாய்
> அரக்கன் தோன்றினான்.

[என்று இவை இனையன எண்ணி—என்று இந்த எண்ணங்களையும் இன்னும் பல எண்ணங்களையும் எண்ணியவனாய். வண்ண வான் பொன்திணி நெடுமரப் பொதும்பர்—அழகிய, பெரிய, பொன்மயமான அடர்ந்த நெடுமரத்தின் இலைமிகுந்த கிளையில். புக்கு—போய். அவண்—அவ்விடத்தில். நின்றனன்—(இங்கே) ஒளித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவ்வழி—அவ்விடம்; அப்போது. துன்று பூஞ்சோலைவாய்—நெருங்கிய பூக்களையுடைய அந்த அசோக வனத்தில்.]

அரண்மனையில் படுக்கையில் பார்த்த அதே அரக்கர்கோன்தான். திடீரென்று விழித்துக் கொண்டு சீதையைச் சந்திக்க வருகிறான்.

மந்திரச் சொற்களை

கம்பன் 'நயம் தெரிந்து கதை நடத்தும் நாடகக் கவிஞன்' அல்லவா?

'அரக்கன் தோன்றினன்' என்று ஒரு படலத்தை முடித்துக் கொண்டு, அடுத்த படலத் தொடக்கத்திலேயே அரக்கர் கோனை அப்படியே தோற்றுவித்துக் காட்டுகிறான், 'அதோ பாருங்கள்' என்று.

இத்தகைய சந்தர்ப்பத்திலே ஷேக்ஸ்பியர், கம்பன் போன்ற உலக மகாகவிகளுக்குச் சொற்களே மந்திர சக்தி பெற்று வந்து பணி செய்கின்றன; இந்திர ஜால மகேந்திர ஜாலங்கள் புரிகின்றன.

இந்திர ஜாலமெல்லாம்-கவியில்
இயற்றிக் காட்டிடுவோன்;
மந்திரச் சொல்லாலே-உள்ளம்
மயங்கச் செய்திடுவோன்

என்று கம்பனைக் குறித்துக் கவிமணி பாடுவது உண்மைதான்.

'மந்திரச் சொல்லாலே உள்ளம் மயங்'குவது மட்டுமா? உள்ளம் தெளிந்து உலக உண்மைகளை எப்படியெல்லாம் கண்டு கொள்கிறது!

இங்கிலிஷைத்தான் ஷேக்ஸ்பியரும் கையாண்டார், மற்ற ஆங்கிலக் கவிகளைப் போல. எனினும் ஷேக்ஸ்பியரின் பாஷை ஷேக்ஸ்பியருக்கே உரியது என்று சொல்லும்படி ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அப்படியேதான் கம்பன் தமிழும்.

உவமைகளை அணி அணியாக அடுக்கி அழகுகளையும் உண்மைகளையும் காட்டிக் கொண்டே போவதில் ஷேக்ஸ்பியரும் கம்பனும் நிபுணர்கள். உவமைத் திறன் கவிஞனின் மகத்தான திறமை என்பர். மகாகவி ஷேக்ஸ்பியரும் மகா கவி கம்பனும், அணிகள் அணியணியாக வந்து சேவகம் செய்யும் வரப்பிரசாதம் பெற்றவர்கள்.

ஷேக்ஸ்பியரின் அணிகளைப் போல் கம்பனுடைய அணிகளும் அணியிலக்கணத்திலிருந்து இரவல் வாங்கியன அல்ல. அகண்ட அனுபவத்தின் பரப்பிலே முளைத்தெழுந்த உபமான வகைகள் ஷேக்ஸ்பியருக்கு உரியன என்று விமர்சகர்களும் ரஸிகர்களும் கூறுவர்: அத்தகைய உபமானங்களையும் அணிகளையும் கொண்டுதான் கம்பன் கவிதையும் காட்சிகளை அப்படியப்படியே கண்முன் கொண்டுவந்து நிறுத்தி விடுகிறது.

ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்றில் ஒரு காதலன் முதன் முதல் காதலியைச் சந்திக்கிறான். சந்திப்பு இரவில் நிகழ்கின்றது. மையிருட்டு, தீவட்டிகள் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கின்றன. **ஜூலியேட்** என்ற அந்தக் காதலியின் இளமை யழகுப் புதுமாட்சி, அந்தக் கணம் முதல் **ரோமியோ** என்ற அக்காதலனுடைய முழுவாழ்வையும் அடிமை கொள்கிறது.

அந்த அழகை ஆங்கிலக் கம்பர் (ஷேக்ஸ்பியர்) எப்படி வருணிக்கிறார் பாருங்கள்:

ஓ! அவள்தான் தீவட்டிகளுக்கு
அப்படி ஜொலித்தெரியுமாறு
கற்றுக் கொடுக்கிறாள்,
இரவு-ராணி அணிந்த வைர
குண்டலம் போல்



சித்ரலேகா

மிளிர்கின்றுள் ;
நேடக்கிடையாத அழகுத்திரவி
யம் ;
மண்ணுலகில் பெறுதற்கரிய
பெரும்பேறு.

இம்மொழி பெயர்ப்பிலே ஷேக்ஸ்பிய ரின் கவிதை ஒளி மங்கித் தான் காண் கிறது. எனினும் ஆங்கிலக் கவிச் சக்ர வர்த்தியின் அந்தக் கலை வளத்தை ஆங் கிலம் அறியாதவர்களும் ஒருவாறு இங்கே கண்டு கொள்ள உதவும் என்று தான் மொழி பெயர்த்திருக்கிறேன்.

ஷேக்ஸ்பியர், கம்பன் போன்ற உலக மகா கவிகளுக்கு வரம்பின்றி விரிந்து கிடக்கிறது உபமானப் பிரபஞ்சம். ஷெல்லி முதலான கவிகளுக்குக் கூட உபமான உலகம் ஒடுங்கித்தான் கிடக் கிறது என்பர்.

மகாகவிகளின் ஏகாக்ரசித்தம் (ஒருமை யுள்ளம்) இயற்கையையும் மனித இயற் கையையும் மூடியிருக்கும் திரையைக் கிழித்து உண்மையை முகமுகமாய்க் கண்டு கொள்கிறது. தமக்குக் கிடைத்த தரிசனங்களைப் பிறருக்கும் காட்ட உப மானங்களையும் மந்திரச் சொற்களையும் வாரி வழங்குகிறார்கள்.

இந்தக் கவித்திறன்தான் 'தெய்வப் பாடல் – சொற்கலை' எனக் குறிக்கப் பெறுகின்றது. இதை 'மந்திரச் சொற் கலை' யென்றும் கூறலாம்.

இனி, கம்பனுடைய தெய்வமாக் கவிதை யென்ற மந்திரச் சொற்கலை ராவணேச்வரனை எப்படி நம் கண் முன் கொண்டு வந்து காட்டுகிறது என்று பார்க்கலாம்.

துன்றுபூஞ் சோலைவாய்
அரக்கன் தோன்றினன்

என்று சொல்லிவிட்டு அந்தத் தோற்றத் திலேயே மெய்ம்மறந்து ஈடுபடுகிறது கவியுள்ளம்.

ஏகாக்ர சித்தமாகிறது. அதுவே தியானமாகிறது. தியான வாசலை



மெள்ளத் திறந்ததும், ராவணேச்வர தரிசனமே ஆகிவிடுகிறது!

அந்தத் தரிசனத்தை நமக்கும் காட்ட உபமான வகைகள் எப்படி யெல்லாம் அணியணியாகத் துள்ளித் துள்ளி வந்து உதவுகின்றன பாருங்கள்!

மலைகள் பலவும் ஒரே இடத்தில் தங்கள் சிகரங்களுடன் திரண்டு நடமாடுவது போலத் தோன்றுகிறது. கருங்கடல் மீது பால சூரியன் உதயமாகி இள வெயில் எறிப்பது போலக் காண்கிறது. எல்லாம் அசோக வனிகை என்ற அந்தப் பூஞ் சோலையின் ஒருபுறத்திலேதான்.

நடுநிசி பகல் படும் பாடு படுகிறது. இரத்தினாபரணங்கள் அணிந்த நங்கையர் ஏந்தி வரும் தீப வரிசைகளின் வெளிச்சத்திலே அப்படி ஜொலிக்கின்றன் தக தகவென்று பத்துக் கிரீடங்களும்.

இன்னும் பாருங்கள்: பருத்துயர்ந்த வலிமை மிக்க தோள்கள் மீது அசைந்தாடுகின்றன வைரமிழைத்த மகர குண்டலங்கள்.

உலகத்தை யெல்லாம் அடைத்துக் கொண்டு வருவது போன்ற ராட்சஸ சக்ரவர்த்தியின் சர்வாதிகார சம்பிரமத்தை அப்படியே பார்த்துக் கொள்ளுங்கள், கம்பன் கவிதை யென்ற சப்த சித்திரத்திலே:

சிகரவண் குடுமி
நெடுவரை எவையும்
ஒருவழி திரண்டன
சிவண,

மகரிகை வயிர
குண்டலம் அலம்பும்
திண்திறல்-தோள்புடை
வயங்க,

சகரவே லையின்நீர்
தழுவிய கதிரின்
தலைதொறும் தலைதொறும்
தயங்கும்

வகைய பொன் மகுடம்
இளவெயில் எறிப்பக்
கங்குலும் பகல்பட
வந்தான்.

[வண்குடுமி நெடுவரை - வளப்பமான உச்சியோடு கூடிய நீண்ட மலைகள். சிவண - போல. மகரிகை குண்டலம் — மகர குண்டலம். அலம்பும் - அசைந்தாடும். திண்திறல் - மிக்க வலிமை. புடை வயங்க - (இரு) பக்கத்திலும் விளங்க. சகர வேலை - சாகரம் அல்லது சமுத்திரம். கதிரின் - (இளஞ்) சூரியன் போல. தயங்கும் வகைய - பிரகாசிக்கும் வகையை உடைய. கங்குல் - இரவு.]

இந்த ராட்சஸ சக்ரவர்த்திக்குக் குண்டலங்களும் அதிகார படாடோபத்தின் பகுதியாகத் தான் சோபிக்கின்றன.

தன் உத்யான வனத்திற்குள்ளே வரும் ராவணன் ஏதோ ஒரு புண்ய ஸ்தலத்தில் அடி வைத்து நடப்பவனைப் போல் வருகிறான், உடைவாளையும் எடுத்துச் சொருகிக் கொள்ளாமல்,—செருப்புகளையும் கழற்றிவிட்டு!

அந்த உடைவாளைத்தான் ஊர்வசி எடுத்துக் கொண்டு பின் தொடர்கிறாள், அந்தச் செருப்புகளையோ திலோத்தமை தலைமேல் தாங்கி, 'தலை படைத்த பாக்கியம் இன்று இந்த அடியாளுக்குத் தான்!' என்று கருதிப் பெருமை கொண்டவள் போல் பின்னே வந்து கொண்டிருக்கிறாள்.

சரி, இந்த மேனகைக்குத்தான் கொஞ்சமோ பாக்கியம்? வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டே வருகிறாள் — எவ்வளவு பெருமையாக! ராவணனோ ஜம்மென்று மாப்பிள்ளை போல வருகிறான்.

ரம்பை முதலான தேவஸ்திரீகளோ பொறுமையுடன் பக்கத்திலே தொடர்ந்து வந்து பணி செய்யப் போட்டியிடுவது போலத் தோன்றுகிறார்கள்:

உருப்பசி உடைவாள்
எடுத்தனள் தொடர,
மேனகை வெள்ளடை
உதவ,

செருப்பினைத் தாங்கித்
திலோத்தமை செல்ல,
அரம்பையர் குழாம்புடை
சுற்ற.........

[உருப்பசி - ஊர்வசி. வெள்ளடை - வெற்றிலை. குழாம் - கூட்டம். புடை — பக்கங்களிலே.]

சீதையை நினைத்துக் கொண்டு ராவணன் மரியாதையாக வந்தாலும், அவ்வளவு படாடோபமும் அவனைத் தொடர்ந்து வருகிறது. தோற்றத்திலும் பிரகாசிக்கிறது. நம் கண்ணுக்கும் இலக்காகி விடுகிறது.

கம்பனுடைய மந்திரச் சொற்களை செய்யும் இந்திர மாஜாலம் இது.

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

430.

என்ன பவனி, என்ன நடை!

நள்ளிரவில் திடீரென விழித்துக் கொண்டான். வெகு காலமாகவே நல்ல உறக்கம் இல்லை. மிகுந்த அலுப்பினால் இன்றிரவு கொஞ்சம் தூக்கம் பிடித்தது. அயர்ந்த தூக்கம் அன்று. அந்தத் தூக்கத்திலே ஒரு சொப்பனம் (அப்போது தான் அனுமன் ராவணனைப் பார்த்தான்) — ஏதோ ஒரு விபரீத சொப்பனம். கோபத்தோடு திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

அந்தக் கனவும் இந்தக் கனவும்

கோபத்திற்குக் காரணம், ஏதோ ஒரு இடையூறு புகுந்திருக்கிறது என்பது தான். தன் ஸர்வாதிகார உள்ளத்திலுள்ள ஆசைக்கு இடையூறு கனவிலும் ஏற்படலாமா?

இடையூறு இன்னதென்று விளங்கவும் இல்லை. அந்த இடையூறு அனுமன் வடிவத்திலே தன் உத்தியான வனத்திற்குள்ளே புகுந்து விட்டது என்பதை எப்படியறிவான்?

அவன் கண்ட அந்தத் துர்ச்சொப்பனத்தின் ஒரு விவரமும் இப்போது நினைவிற்கு வரவில்லை.

திரிஜடை சொப்பனத்தை விவரமாய்க் கூறும் கவிஞன், இச் சொப்பனத்தை இன்னதென்று சொல்லாமலே நம் உள்ளத்தை வசிகரித்து அந்த ராவண பவனியோடு பவனியாக இழுத்துக் கொண்டு போகிறான்.

கனவும் பலனும்

'அந்தரம் புகுந்த(து)
— உண்டு' என முனிவுற்(று)
அருந்துயில் நீங்கினான்,
ஆண்டைச்
சந்திர வதனத்(து)
அருந்ததி இருந்த
தண்ணறுஞ் சோலையின்
தனையோ?
மந்திரம் யாதோ?
யாரொடும் போமோ?
என்றுமா மனம்மறுக்
குறலால்
இந்திரன் முதலோர்
இமைப்பிலா நாட்டம்
முகிழ்த்தனர், உயிர்ப்பவிந்
திருப்ப

[அந்தரம்-இடையூறு. முனிவு-கோபம். அருந்துயில் - அருமையாகக் கிடைத்த தூக்கம். ஆண்டை - அங்குள்ள. அருந்ததி - (இங்கே) அருந்ததி போல் மகா பதிவிரதையாக இருக்கும் சீதை. தண்நறு - குளிர்ந்த வாசனையுள்ள. சோலையின் தனையோ - சோலைவரையிலுமோ. மந்திரம் - (இங்கே) ஆலோசனை. மாமனம் - பெரிய மனம். மறுக்குறலால் - கலக்கமடைவதால். இமைப்பிலா நாட்டம் - இமையாக் கண்கள். முகிழ்த்தனர் - மூடிக் கொண்டவர்களாய். உயிர்ப்பு அவிந்து - மூச்சுக்காற்றும் அடங்கி.]

என்றவாறு கனவும் கனவின் பலனும் வருணிக்கப்படுவதைப் பாருங்கள்.

திடீரென்று ராவணன் எழுந்து முனிவுற்று வெளியே புறப்பட்டதும் வந்துவிட்டது கவலை இந்திரன் முதலான தேவர்களுக் கெல்லாம். 'கோபம் அசோகவனத்தோடு தான் நிற்குமா?

அன்றி......' என்ற எண்ணப் பிரவாகத்திலே மனம் சுழன்று மதி அலைபட்டு அச்சம் பொங்க, இந்திராதி தேவர்களுக்கு இமையாத கண்களும் இமைத்து மூடிக் கொள்கின்றனவாம்.

ஆஸ்திரிச்சு என்ற நெருப்புக் கோழி. வேட்டைக்காரன் வருகிறான் என்ற பயத்தினால் புதருக்குள் கண்களை மறைத்துக் கொள்ளும் என்று கேட்டிருக்கிறோமல்லவா? தனக்கு இருண்டு போகும் உலகத்திலே எதிரிக்கும் கண் தெரியாது என்பது அந்த மூடப் பறவையின் கருத்து என்பர். இந்த நிலையைத் தேவராஜாவும் மற்றத் தேவர்களும் அடைந்தார்களா?

அவ்வளவு தூரம் போவானேன்? பெரும் பயத்தால் கண்கள் மூடிக் கொள்வது உண்டல்லவா? இப்போது



இமையாத கண்களும் இமைத்து மூடிக் கொண்டதால் அவ்வளவு பெரும் பயம் தேவலோக வாசிகளுக்கு!

சாதாரணமாகத் தேவர்களுக்கு இமைக்க முடியாது என்பர். இப்போதோ கண்களைத் திறக்க முடியவில்லை! மூச்சும் திணறி அடங்கப் பார்க்கிறதாம்.

தீபமங்கள ஜோதியில்

இத்தகைய பெரும்பயத்திற்குக் காரணமான ராவணபவனி தான் எவ்வளவு வசிகரமாக வருணிக்கப்படுகிறது!

அழகிய கைகள் வரிசை வரிசையாக அழகிய தீபங்களை ஏந்தி வரும் அந்த வசிகரக் காட்சியைத்தான் பாருங்கள். அப்பெண்மணிகள் காலில் அணிந்துள்ள நூபுரமும் கிண்கிணியும், இடையில் அணிந்துள்ள மேகலாபரணமும் இசைக்கின்ற இன்னொலிகளும் நம் காதில் விழுகின்றன.

அப்பெண்கள் அணிந்துள்ள இரத்திஞபரணங்கள் போதுமே இருளைப் போக்குவதற்கு! (அவர்களுடைய மேனி ஒளியே போதாதா?) 'தீபங்களை மங்களமாகத்தான் ஏந்திப் போகிறார்களோ?' என்று கூடத் தோன்றுகிறது:

நானநெய் விளக்கம்
நாலிரு கோடி
நங்கையர் அங்கையால்
எடுப்ப,

மேனிவந் தெழுந்த
மணியுடை அணியின்
விரிகதிர் இருளெலாம்
விழுங்கக்,

கால்முதல் தொடர்ந்த
நூபுரம் சிலம்பக்
கிண்கிணி கலையொடும்
கலிப்பப்

பால்நிறத்(து) அன்னக்
குழாம் படர்ந்தென்னப்
பற்பல மங்கையர்
படர.

[நான நெய் விளக்கம் — வாசனைத் தைலம் விட்டு ஏற்றிய விளக்குகளை. நாலிருகோடி நங்கையர்—எட்டு வரிசையாக உள்ள பெண்கள். அங்கையால் எடுப்ப—அழகிய கைகளால் ஏந்திவர. மேனி வந்து எழுந்த மணியுடை அணியின் — அப் பெண்களின் மேனிகளில் அமைந்து தோன்றும் இரத்திஞபரணங்களின் விரிகின்ற ஜோதி. கால் முதல் தொடர்ந்த — காலில் அணிந்த. கிண்கிணி – சதங்கை அணிகள். கலை - மேகலை. கலிப்ப – ஒலிக்க. குழாம் – கூட்டம். படர்ந்தென்ன – (ஒலித்துக் கொண்டு) செல்வது போல.]



ஒவ்வொரு அங்குலமும் சக்ரவர்த்திதான்

இம் மங்கையர் குழாத்தை விட்டு நம் கவனம் ராவணேச்வரனது கம்பீர மாட்சியிலேயே ஈடுபடுகிறது.

அந்தக் கிரீடங்களையும் மகர குண்டலங்களையும் கூட விட்டு விட்டு, அவன் அந்த உத்தரீயத்தை அணிந்திருக்கும் மாட்சியையும் பெருமிதத்தையும், பொன்னாரமும் பூணூலும் மார்பிலே அசைந்து புரளும் அந்தக் காட்சியையும் பார்த்துக் கொண்டேயிருந்தாலும் போதுமென்று தோன்றுகிறது. (இந்தப் பூணூலை இப்படிக் கண்டும் ராவணனை வேறு விதமாக இனம் காட்டப் பார்க்கிறார்களே!)

நீல மலையிலிருந்து இறங்கும் அருவி போலத் தோன்றும் அந்தப் பால் நிறப் பட்டு உத்தரீயத்தை அப்படித் தோளில் மாலையாகத் தொங்க விட்டுக் கொண்டிருக்கிறான். கழுத்திலே பொன்னாரம், மார்பிலே பூணூல் — அப்படியே பார்த்துக் கொண்டிருங்கள்:

நீல் நிறக் குன்றின்
நெடிதினில் தாழ்ந்த
நீத்தவெள் ளருவியின்
நிமிர்ந்த
பால் நிறப் பட்டின்
மாலைஉத் தரிகம்
பண்புறப் பசும்பொனா—
ரத்தின்

மால்நிற மணிகள்
இடையுறப் பிறழ்ந்து
வளர்கதிர் இளவெயில்
பொருவச்,

சூல்நிறக் கொண்மூக்
கிழித்திடை துடிக்கும்
மின்னென மார்பில்நூல்
துளங்க.

[நீல் நிறக் குன்றின் – நீல நிறமுள்ள குன்றிலிருந்து. நெடிதினில் தாழ்ந்த – நீளமாக இறங்குகின்ற. நீத்த வெள் அருவியின் – பெருக்காகிய வெண்ணிற அருவி போல. பண்புற – அழகுடன் பொருந்தி விளங்க. மால் நிற மணிகள்– பேரொளியுள்ள இரத்தினங்கள். இடையுற – இடையே பொருந்தி. பிறழ்ந்து - மாறி மாறி. வளர் கதிர் இளவெயில் பொருவ - மிகுந்த கிரணங்களையுடைய சூரியனது இள வெயிலை ஒத்து, ஒளிவீச. சூல் நிறக் கொண்மூ — கருக் கொண்டிருக்கும் காளமேகத்தை. துளங்க - அசைந்து விளங்க.]

அந்தத் தோள்களைப் பார்த்தாலும் சரி; காலிலுள்ள அந்த வீரக் கழல்களைப் பார்த்தாலும் சரி—வீர சௌந்தரியம் ஜொலிக்கிறது. இதை எடுத்துக் காட்டுகின்றன மகர குண்டலங்களும் வீரத் தோள்களிலுள்ள வைரவாகு வலயங்களும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அந்தப் புன்னகையால் அந்த முகங்கள் சோபிக்கின்ற சோபையைத்தான் பாருங்கள்:

தோள்தொறும் தொடர்ந்த
மகரிகை வயிரக்
கிம்புரி வலயமாச்
சுடர்கள்

நாள்தொறும் சுடரும்
கலிகெழு விசும்பின்
நாளொடு கோளினை
நக்கத்,

தாள்தொறும் தொடர்ந்த
தழங்குபொற் கழலின்
தகையொளி நெடுநிலம்
தடவக்,

கேள்தொறும் தொடர்ந்த
முறுவல்வெண் ணிலவின்
முகமலர் இரவினும்
கிளர.

[மகரிகை—காதணியாகிய மகரகுண்டலம். வயிரக் கிம்புரி வலயமாச் சுடர்கள்—வைரத்தால் இயன்ற, பூண்போன்ற வடிவமுள்ள, தோள்வளைகளின் பேரொளிகள். கலிகெழு விசும்பின் — ஓசை விளங்கக் காரணமான ஆகாயத்திலே. நாளொடு — நட்சத்திரங்களோடு. கோளினை நக்க—கிரகங்களையும் பரிகசிக்க. தாள்தொறும் தொடர்ந்த — இரண்டு கால்களிலும் அணிந்த. தழங்கு—ஒலிக்கின்ற. தகை ஒளி—சிறந்த ஒளி. கேள் தொறும் தொடர்ந்த — சுற்றத்தாரிடத்தும் நண்பரிடத்தும் தொடர்ந்து செல்லுகிற. கிளர – விளங்க.]

பொற்சரிகை வஸ்திரத்தைப் பாதம் வரையிலும் தழைந்து தொங்குமாறு தரித்திருக்கிறான். உடல் நிறத்தோடு மாறுபட்டு ஒளிர்கின்றதாம் பொன்னுடை:

தன்நிறத் தோடு
மாறுதந் திமைக்கும்
நீவி அந் தழைபட
உடுத்த

பொன்னிறத் தூசு
கருவரை மருங்கில்
தழுவிய புதுவெயில்
பொருவ—

[மாறுதந்திமைக்கும் – மாறுபட்டு விளங்குவதும். நீவி – வஸ்திர முடிச்சு; இங்கே கச்சம். அம் – அழகிய. தழை – தழைந்து தொங்குவதும், ஒரம் கொய்து சுருக்கப்பட்டதுமான உடை. பட - பொருந்தும்படி. பொன்னிறத் தூசு - பொற் சரிகை வஸ்திரம். கருவரை மருங்கில் - கரு நிறமுள்ள மலையினிடையே. பொருவ-ஒத்திருக்க.]

வந்து கொண்டிருப்பதைப் பாருங்கள்:

இந்த ராவண காம்பீர்யத்தைப் பூர்த்தி செய்கின்றன, மலைமேல் அலை போலப் புரளும் வெண்சாமரங்களும், சந்திர வட்டக் குடையும்.

*　　*　　*　　*

பூமி அதிரும்படியாகக் கால்களை மாறி மாறி வைத்துக் கைவீசி வருகின்ற அந்தத் தோரணையே ராவணனை அகில லோக சர்வாதிகாரியாகக் காட்டுகிறது.

ஏதோ இடையூறு தன் ஸர்வாதிகார ஸங்கல்பத்திற்கு நேர்ந்துவிட்டதென்று கனக் கண்டு முனிவுற்று வருகின்றவன், அந்த இடையூற்றை மிதிக்கவோ, உதைக்கவோ போவது போல் மிடுக்காக நடை போட்டு வருகின்றான்.